
மான்கள்



மரங்கள்

இரத்தச் சுவடு

S.7.8

மு.கருணநிதி

SPECIMEN

விற்பனை உரிமை:



பூம்புகார் பதிப்பகம்
சென்னை

வெளியீடு: 49
முதற் பதிப்பு: ஜனவரி 1953
உரிமை உடையது

தோழர் கருணாநிதி அவர்கள், சென்னையில் மீர்சாஹிப்பேட்டை, திருவல்லிக்கேணி ஆகிய இடங்களில் அவ்வப்பொழுது பேசிய பேச்சுக் களைத் திரட்டி, தனித்தனித் தலைப்புகளின் கீழ் வெளியிட்டிருக்கிறேன். அனுமதி யளித்த தோழர் கருணாநிதிக்கு என் நன்றி!

மு. நமசிவாயம்.

விலை ரூ. 1—0—0
அட்டை பைண்ட் ரூ. 1—8—0

வெளியீடு:-
தற்றப் பண்ணை
சென்னை

மான் வேட்டையும் மனித வேட்கையும்

மனித வேட்கை, மனித வாழ்வின் சூழ்நிலைகளைப் பொறுத்துப் பலப்பல விதங்களிலே, அமையும், அமைகின்றது, அமைந்துள்ளது!

மனிதன் பகுத்தறிவு படைத்தவன் — மிருகங்களை விட மேம்பட்டவனெனக் கருதப்படுபவன். நன்மை—தீமைகளை ஆய்ந்து அலசி முடிக்க முடியும், மனிதனால். அறிவின் துணைகொண்டு.

ஆனால் மனிதரில் சிலர், மிக மிகச் சிலர், தமது அறிவையும், ஆற்றலையும், ஆகாத, தகாத, தீய வழிகளிலேயே செலுத்திக் கொண்டிருக்கின்றனர். பிறரது நிலை, வாழ்வு—வாழ்வின் இலட்சியம் என்ன ஆனால் என்ன, எனக்கேன் கவலை, என் நிலையே எனக்குப் பெரிது என்று எண்ணி இறுமாந்து பிறரது வாழ்வில் வாழ்க்கை முறையிலே, நல் வாழ்வுப் பாதையிலே விளையாடுகின்றனர். வேடிக்கைகளும் கேளிக்கைகளுங் கூட நடத்திக் களியாட்டம் போடுகின்றனர்.

சிலரது போக்கு பொழுது போக்கு பிறரது வாழ்வில் வாழ்வுப் பாதையில் குறுக்கிட்டு, குறுக்குச் சாலோட்டி, பாதையை வன், பாதையில் நடந்திடுவோரின் மனப் பண்மையுமே பாழ்படுத்திச் சீரழித்து விடுகின்றனர், தமது சிறிது நேரச் சில்லரை விளையாட்டிற்காக, தமது வேட்கையை அடக்க முடியாத கோழைத்தனத்தின் விளைவால், வெறியாட்டத்தால்!

மனிதனது வேட்கைகளை விருப்பங்களை யுடைய மனிதன், தனது அறிவையும், ஆற்றலையும் பயன்படுத்துகிறான். ஆனால் சில பல நேரங்களில், முறையற்ற வேட்கைகளை முறையற்ற முறையில் அடைந்து ஆனந்தப்படத் துடித்திடுகிறான். அப்போது அவனது வேட்கை — வெறியாக மாறுகிறது.

வெறி! மனிதனது பலவீனமான, அற்ப, ஆகாத ஆசாடபாதோன்றிடும் விபரீத வேட்கை!

விபரீத ஆசையை, வேட்கையை நிறைவேற்றிக் கொள்ள மனிதன், முயலும் போது மனிதனிடமுள்ள மனித மனம் மாறி மிருகத்தனம், காட்டுமிராண்டித் தனம் தோன்றித் தன்னிலையை மறந்து தலைகால் தெரியாது, தான்தோன்றித் தனமாக நடக்கிறான்.

மனிதனது வேட்கை, விபரீத வேட்கையாக. வெறியாக மாறிடும் நிலையிலேதான் ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமைப்படுத்துவதும், ஒரு இனம் மற்றொரு இனத்தை யழிப்பதும் அடக்கியாள்வதும், உழைப்பை உறிஞ்சிச் சுரண்டுவதுமான கோரங்கள், கொடுமைகள் உலகில் நிகழ்கின்றன!

மனித வேட்கையிலே வேட்டையாடுவதும் ஒன்று, சிலருக்கு. மான் வேட்டை, மனிதனுக்கு மகிழ்ச்சி தரும் வேட்கை—ஆனால் மானுக்கோ மட்டற்ற துன்பப் பெருக்கு!

மேலட்டையிலே, மனிதனது வேட்டை யாடிடும் வேட்கையால், துப்பாக்கி வேட்டுக்கு இரையான மான், தாய் மான். இரத்தம் கொட்டக் கொட்ட, இரத்தச் சுவடுகள் வழி யெல்லாம் ஏற்பட, ஏற்படத் துடித்துத் துவண்டு சென்று, சாகும் நேரத்திலும் தனது சந்ததிக்கு, மான் குட்டிக்குப் பாலூட்டிடும் பரிதாபக் காட்சி சித்தரிக்கப்படுகிறது.

மானின் இரத்தச் சுவடு, அதன் வழியே சென்று மானிடும் மான் தன் குட்டிக்குப் பாலூட்டிடும் காட்சி—அது தரும் பாடம், நமக்கும் தேவை—தேவை, மனிதப் பண்புடன் வாழ்ந்திட என்று கருதுகிறேன்.

இரத்தச் சுவடு! என்ற இந்நூல் இம்முறையில் [illegible]டுத்தப்பட வேண்டும்.

வணக்கம்,

மு. நமசிவாயம்

பண்ணையாளர்.

பஜகோவிந்தம் !

பஜகோவிந்தம் !

பஜகோவிந்தம் ! பஜகோவிந்தம் !

"பயப்படாதீர்கள் தோழர்களே, பயப்படாதீர்கள் ! ஏது பஜகோவிந்தம் பாட ஆரம்பித்து விட்டாரே, கருணைநிதி" என்று.

இன்று நாட்டிலே நல்ல நிலையிலே, எல்லாவித வசதிகளுடனும் கூடிய எந்தத் தினசரி, வார, மாதப் பத்திரிகையைப் புரட்டினாலும் 'பஜகோவிந்தம்,' பற்றிய செய்தி நிச்சயம் இருக்கக் காண்கிறோம்.

'பஜகோவிந்தம்' பாடுங்கள் ! பகவானைப்பாடுங்கள், பிரார்த்தனை செய்யுங்கள், பசி, பிணி முதலியன நீங்கிட, மழை பெய்திட என்று ஊருக்கு உபதேசம் செய்திடும் ஊராருடும் மந்திரியார் கனம் ஆச்சாரியார் ஊர் சுற்றி வரும் இடங்களில் மட்டுமல்ல 'மத நடுநிலைமை' வகித்திடும் அரசாங்க சட்டசபையிலும் பேசிடத் தவறக்காணோம்.

'பஜகோவிந்தம், பஜகோவிந்தம்', என்ற
இதைத்தான் குறிப்பிட்டேன்,
இதைத்தான் குறிப்பிட்டேன்.

பரியா—பட்டினியா !

மழையில்லை, நீரில்லை நிலத்தைப் பயிரிட வழியில்லை, வகையில்லை என்று வருத்தப்படாதே, வாட்டமுறுதே, பாடு 'பஜகோவிந்தம், பஜகோவிந்தம்!'

'பிராத்தனை செய், பகவானைப்பாடு, புகழ்; பாவம் போகும், புண்ணியம் வரும்.'

பிராத்தனையால் ஆகாதது ஒன்றும் இல்லை. அதை மறவாதீர்! என்றெல்லாம் பேசிவருகிறார் கனம் ஆச்சாரியார், அவர் சென்னை இராஜ்ஜியத்தின் முதன் மந்திரியாக, எப்படியோ ஏற்பட்டு விட்டபிறகு.

'பஜகோவிந்தம்' பற்றிய கட்டுரைகளைக் கல்கியிலே தீட்டி வந்த ஆச்சாரியார், வெயில் பரக்கக் காய்ந்த சென்னையிலே இல்லை, அதை எழுதிட.

குற்றாலம் சென்றார். குளுகுளுவென்ற குன்றுச் சாரலிலே வாசம் செய்தார். 'பஜகோவிந்தம்' பக்கம் பக்கமாக, வாராவாரம், குற்றாலத்திலிருந்து எழுதினார்.

பாவம்—பரிதாபம், வெயில் தாங்கவில்லை, குற்றாலம் சென்றார், பிராத்தனை மூலம் மழைபெறச் சொல்லும் மதிவாணர் (!), முதன் மந்திரி ஆச்சாரியார்!

[illegible] பஜகோவிந்தம், பஜகோவிந்தம்
[illegible]ட்டினி, யாவற்றையும் மறந்து,
என்று சொல்லாமற் சொல்லு

மழைபெய்யவில்லை, மாகதிகளும் வரண்டு விட்டன; நாட்டிலே பஞ்சம்—பட்டினி என்றநிலை, நிம்மதியற்ற நிர்க்கதியான நிலை ஏற்பட்டபோது, மூன்னாள் மத்திய சர்க்கார் உணவு மந்திரி மூன்வதி, மழையைத் தருவிக்கப் பிருந்தாவனத்திட்டமென மரம் நடுவிழாக்களைக் கொண்டாடிக் கொண்டாடி மக்கள்வரிப் பணத்தைப் பாழாக்கினர்.

மூன்பொரு நாள், இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த இந்தச் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் கூட, கவர்னர் ஜெனரல் மாளிகையின் தோட்டத்தைத்தாமே உழுதுபயிரிட்டதாக, சோளம் விளைவித்ததாகப் பத்தி பத்தியாகப் பல பத்திரிகைகளிலும் செய்திகள் வந்தவண்ண மிருந்தன. பலப்பல புகைப்படங்களும் பத்திரிகைகளிலே, பலரின் கருத்தையும் கவனத்தையும்கவரும் எண்ணத்துடன், ஏன், ஏற்பாட்டுடனும் பிரசுரிக்கப் பட்டன.

ஆம், நன்முக நினைவிற்கு வருகிறது. நான் பார்த்துப் பார்த்து ரசித்த ஓர் படம், நான் மட்டுமென்ன நாட்டோர் அனைவரிலும், கூர்ந்து கவனித்திடும் மதி படைத்தோர் அனைவரின் கண்ணிலும் கருத்திலும் அந்தக் காட்சி, அந்தப் புகைப்படம், பத்திரிகைகளிலே வந்தது நிச்சயம் நினைவைவிட்டு அகன்றிருக்கவே முடியாது, முடியாது நிச்சயம் முடியாது.

அற்புதமான படம், அர்த்தனார் ஜெனரல், கலப்பை [illegible]
கின்ற காட்சி—படம்.

கலப்பையைக் கை பிடித்திருக்க, முகத்திலே முறுவல் தவழ, ராஜாஜி, நிலத்தை உழுகின்ற காட்சி—படம், அது.

ஒரே ஒரு முறை, பெருங்குறை, முக்கிய குறை, எந்தக்கருத்தை, எல்லோரும் உழுங்கள், கவர்னர் ஜெனரலே உழுகின்றார் என்ற எண்ணத்தை எல்லோர் மனத்திலும் ஊட்டிட வேண்டும் என்ற கருத்தினை விளக்கிடும் காட்சியாக, பாடமாக இந்தப் படம் பிடிக்கப்பட்டதோ, அதற்கு நேர்மாறான, மூரணை கருத்தைக் காட்டிடும் குறை—அதிலே கண்டேன்.

கால்களிலே செருப்பு. கவர்னர் ஜெனரல் கால்களிலே செருப்பு அணிந்து கொண்டு, பஞ்சகச்சம் போன்ற ஆடை அணிந்த முறை நிலத்தை உழும்போது! இவற்றைக்கண்டேன்.

ஏர் உழும் வகை, வழி தெரியாதவர், ஏர் உழுவதுபோன்ற காட்சியில் நடிப்பதற்காகவே தன்னைத் தயாரித்துக் கொண்டு, காமிராவின் முன் நிற்கிறார் —நின்றார், உண்மையில் ஏர் உழுவில்லை என்பதைத் தானே, பஞ்சகச்சமும் பாதரட்சையும் தெரிவிக்கின்றன—என்று அன்றே கேட்டேன். என் போன்ற பலரும் கேட்டனர், கவர்னர் ஜெனரலைப் [illegible]க்து, பல பல மேடைகளிலே, பொதுக் கூட்டலை ஏடுகளிலேயுங் கூட, பதில்களுரும், அதிகாரத்தின் எல்லை ஆச்சாரியாரின் பதிலை எதிர்

ஆனால் நாங்கள் கேட்ட கேள்விகள், நாட்டுமக்களின் நல்ல செவிகளிலே கேட்டு, அவர்களை சிந்தனையைக் கிளறும் என்று எண்ணினோம், விரும்பினோம், எதிர்பார்த்தோம், ஏன், எதிர்பார்த்தே தான் கேள்விகள் கேட்டோம்.

கேளாக்காதர்களான, அதிகாரிகள் கேளாவிட்டாலும், நாட்டினரின் நல்ல செவிகளிலே, இக் கேள்விகள் விழுந்தன, விவேகமுள்ளவர்களாகப் பலரைப் பண்படுத்தவும் செய்தன.

கடந்த பொதுத் தேர்தலிலே இதனைக் கண்ணாரக் கண்டோம். காங்கிரஸ், குறைந்த அளவு மெஜாரிட்டி கூடப் பெறமுடியாத அளவுக்குத் தோல்வியைக் கண்டது, தேர்தலிலே.

வெறும் வேடமிட்டு விளம்பரம் செய்து கொண்டு, அதுவும் சர்க்காரின் செலவிலேயே, அதிகாரம் செய்திடும் வீணர்களை மீண்டும் மீண்டும் ஆட்சிப் பீடத்திற்குச் சென்றிட அனுமதியோம் அனுமதியோம் என்று உறுதியாக அறுதியிட்டுக் காட்டி விட்டனர் செயலில், மக்கள்.

பலப்பல மூன்றாண் மந்திரிகள், மாஜி சட்ட சபை மெம்பர்கள் காங்கிரசின் பலத்தால் அடக்கு முறையையும், ஆடம்பரத்தையுமே துணையாகக் கொண்டு ஆட்சியிலே வாழ்ந்து வாழ்விலே, வாழமுடியாதவர்களாகி பட்டனர். தேர்தலிலே தோல்வி கண்டனர் என்பது

இதன் விளைவாகத்தானே குற்றலத்துக்குளுமை யான வாசத்திற்குப்பின், சென்னை வந்த குல்லுகப் பட்டர் — ஆச்சாரியார், கொல்லைப்புற வழியாக மேல்சபை அங்கத்தினராக நுழைந்து, எத்தனை யெத்தனையோ தில்லுமுல்லுகளும், சாம, பேத, தான, தண்டமென்ற எதை எதையோ ஆதார மாகக்கொண்டு, காங்கிரசல்லாதாரின் காலடிகளை ஏந்தி, இன்று கம்பீரமாகக் காங்கிரஸ் ஆட்சி மீண்டும் நடக்கின்ற காட்சி—கேவல நிலை, கதியற்ற பிறர் தயவில் தொங்கிக் கொண்டிருக்கின்ற அற்ப ஆயுள் ஆட்சி நடக்கின்றது! என்று கேட்ப தில் தவறென்ன தோழர்களே! சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

காங்கிரசின் ஆட்சி, இன்று, இந்தச் சென்னை ராஜ்ஜியத்திலே!

காங்கிரஸ் கலைந்துபோன கட்சி, மெஜாரிட்டி பெறமுடியாதுபோன கட்சி, கடந்த தேர்தலில்! என்றாலும், இங்கே நடப்பது காங்கிரஸ் கட்சியின் ஆட்சி? எப்படி! எதனல் முடிந்தது, முடிகிறது?

எப்படியும் ஆட்சியைக் கைப்பற்றியே தீர வேண்டும் என்ற ஒரே போராசை பிடித்து அலைந்த காங்கிரசார், சென்னை முதன் மந்திரி பதவிக் [illegible] சுகமற்றவர்போல, மந்திய சர்க் மந்திரி பதவியிலிருந்து தானே தில் வசித்துப் பழுகோவிந்தம் [illegible]டு பதவியேற்ற ஆச்

சாரியார் அவர்களின் ஆசை வார்த்தைகளில் மயக்கு மொழிகளில் மயங்கிப் பலர், காங்கிரசுக்கு எதிராக நின்று காங்கிரசின் கண்ணியத்தை, மானத்தைக் காற்றிலே பறக்கடித்தவர்களிலும் சிலர், துரோகிகள் ஆனார்கள். காங்கிரசிலேயே சேர்ந்தும், ஆதரவு அளித்தும் மக்கள் துரோகிகள் ஆனார்கள்.

பதவியைக் கைப்பற்றப் பலவிதத்திலும் முயன்று வெற்றியடைந்த ஆச்சாரியார், பதவியைப் பாதுகாத்துக்கொள்ள, பொது மக்களின் கவனத்தை ஆட்சியாளரிடமிருந்து வேறு பக்கம் திருப்பிவிடும் பணியிலே மிகமிகப் பக்குவமாக ஈடுபட்டுள்ளார்.

மக்களின் கஷ்டங்களுக்கெல்லாம் மக்களின் பாவங்களே காரணம். மக்கள் மத நம்பிக்கையற்று இருத்தல், மக்கள் கலகத்துக்கு இடம் கொடுத்தல், பக்திமார்க்கமே, நன்று. பிராமணனே வாழ்வின் இலட்சியம், இன்பம், இனிமை எல்லாம் என்று பலபடப்பேசி பக்திப் போதனையிலேயே காலத்தைக் கடத்துகிறார்.

எங்கே சென்றாலும், எதைப்பற்றிப் பேசினாலும், எந்தச் சந்தர்ப்பத்திலே பேசினாலும், சட்டசபையானாலும் சரி, கலவைத் தொழிலாளர் கூட்டமானாலும் சரி, முனிசிபல் தேர்தல் கூட்டமானாலும் சரி, மோட்டார் தொழிலாளர் ஆயுதபூஜை விழாவானாலும் சரி, பேச்சு, பாட்டு, பஜனை, பழமே தனை!

இவ்வளவும் ஏன்? எதற்காக, இந்தப் பக்திப் பிரச்சாரம், பஜனை, பஜகோவிந்த நாமாவளியெல்லாம்?

பிரார்த்தனை செய்யுங்கள், பகவானிடம் சர்வதையும் ஒப்படைத்துவிட்டு, பக்தியோடு பிரார்த்தனை செய்யுங்கள். மழை பொழியும், மண்பஞ்சமும் நீங்கும், நாடும் செழிக்கும் என்றெல்லாம் காரணங்கூறுகிறார்!

ஏதோ, புதிய முறையைக் கூறிவிட்டதுபோல, மழைக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள் என்று அத்தனை காங்கிரஸ் தலைவர்களும், அதன் பத்திரிகைகளும் இதையே பெரிதும் பிரசாரம் செய்தன!

மழையும் ஏதோ பெய்தது. அதன் பலன் என்ன? மனக்குறை தீர்ந்ததா? நீர் வளமும் அதன் மூலம் நிலவளமும் பெருகியதா என்பது வேறு தனிப்பிரச்சினை!

ஆனால் எங்கும், காங்கிரஸ் கூட்டங்களிலே, பத்திரிகைகளிலே ஒரே பிரச்சாரம், 'மகான் வந்தார் மழை பொழிந்தது, மாமுனிவர் வந்தார் மழை பெய்தது,' என்பதுதான்.

ஆச்சாரியார் ஓர் பெரிய மகான், மாமுனிவர். அவர் இந்த சென்னை அரசாங்கத்தின் முதன் [illegible]ாகப் பதவியேற்றது பெரிய வாய்ப்பு; [illegible]ும், மக்கள் மனதிலே மகிழ்ச்சி [illegible]ம் கரைத்தது; மழையும் பொழிந் [illegible]ம் பெருகும்; மக்கள் குறை

தீர்த்திடும் என்ற பேச்சு, பிரச்சாரம் மிகுந்த அளவில் நாட்டின் மூலை முடுக்குகளெங்கும் நடைபெறுகின்றன.

காக்கையுட்கார்ப் பனம்பழம் விழுந்த கதையே, இந்தக் கனம் ஆச்சாரியார் கொல்லை வழியே உள்ளே புக, கொட்டுமழை கொட்டியதாம்! வேடிக்கை! வேடிக்கை!!

—(❋)—

குற்றவாளிக்கூண்டில்
குல்ஹாகபட்டர்.....!

மகான் வந்தார் மழைபொழிந்தது, மாமுனி வந்தார் மழை பொழிந்தது, என்ற மட்டற்ற மகிழ்ச்சிப் பெருக்கிலே நீந்திக்களிக்கும் காங்கிரஸ்காரர்களுக்குக் குறுக்கே நிற்கவேண்டாம், நாம்' ஏன், அதை வேண்டுமானல் ஓளவு ஒப்புக் கொள்ளலாம் வாதத்திற்காக.

இத்தகைய மாபெரும் சக்தி வாய்ந்த மகான்—ஆச்சாரியார் அவர்களைக் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாக இந்த நாட்டுக்கு—குறிப்பாகசென்னை இராஜ்ஜியத்திற்குச் சேவைசெய்ய வாய்ப்பளிக்காது விரட்டப்பட்டார்; விலக்கப்பட்டார்.

அரசியல் துறவறம் பூண்ட ஆச்சாரியாரை சென்னைக்கு முதலமைச்சராக இருக்கும்படி அவர் சென்றவிடமெல்லாம் பின் தொடர்ந்தனர், பிரகர்கள் பலர். மறுத்தார் ஆச்சாரியார். மண்டியிட்கஞ்சினர் மற்றவர். நாம் பயந்தோம் எங்கே ரியார்—பட்டம் பதவியின் வலையிற் படாத யார் பதவியை தூக்கியெறிந்து விடுவாரோ

ன்னை செய்த புண்ணியம்
ார். அவரை அலட்

சியப் படுத்திஞர்கள் இந்த மக்கள். துரோகி என்று தூற்றுமலே தூற்றிஞர்கள். என்றலும் அதை மறந்து ஏற்றுக்கொண்டார் பதவியை ஆச்சாரியார். என்று பலர் பலவிதமாக, பல ஏடுகளில் பற்பல சமயங்களில் எழுதிஞர்கள்—எடுத்துக் கூறிஞர்கள் இடித்தும் கூறிஞர்கள். அவர்களது நல்ல கருத்துக் குத் (!) தடைக் கற்களாக நாம் நிற்க வேண்டாம். மக்கள் அவரை தூற்றியது பாவம் என்று அவதிப் பட்டவர்கள் கூற்றை ஒப்புக் கொள்வோம் நாம் வாதத்திற்காக!

கடந்த பொதுத் தேர்தலிலே, போதிய மெஜா ரிட்டி கிடைக்காத காரணத்தால் 'அய்யகோ' என்று அலறி ஆச்சாரியாரைத் தஞ்சம் புகுந்தனர் காங்கி ரஸ் கட்சியின் தியாகிகள். முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்ட ஆச்சாரியார் கற்ற வித்தைகளைக் காட்ட ஆரம்பித்தார். தன் கட்சியை வலுப் படுத்த சாணக்கிய தந்திரங்களை—குள்ளநரி பயன் படுத்தும் கள்ளவழிகளை மெல்லக் கடைப் பிடித்தார். காங்கி ரஸ்காரர்கள்—அவர் வழியில் குறுக்கிட முடியாத காங்கிரஸ்காரர்கள் — வேறு வழியின்றி — வக் கின்றி—வகையின்றி — அவரது கூற்றுகளுக்கு 'ஆமாம்' போடுகின்றனர். அந்த ஆனந்தத்தில் திளைத்திருக்கிறார் ஆச்சாரியார்.

ஆச்சாரியார் பதவியை மேற்கொண்ட அடை மழை பெய்தது. பிரார்த்தனையாடி லது அவர்களுக்குப் பிரியமான திலேலோ—ஆலல் ரஷ்யாவிலே போல, விமானத்திலே

பண்ணியதாலே அல்ல, இயற்கையாகவோ எப்படியோ—மழைபெய்தது.

வரவேற்கிறோம் இதை, மக்கள் மகிழ மழை தேவை, என்பதால். வாடும் மக்கள் வளம் பெற மழைவேண்டும் என்ற உண்மையை அறிந்ததால்—நாங்கள் மனிதத்தன்மை உள்ளவர்கள் என்பதலால் ஏற்றுக் கொள்கிறோம்.

மழையை வரவழைத்தார் மாகனம் பொருந்திய முதல் மந்திரியார் என்ற கூற்றை ஒப்புக் கொள்வோம், உண்மை என்று உணர்ந்ததால் அல்ல, வாதத்திற்காக.

எதிரியின் கூற்றை ஏற்போம், அவரது கூற்று, அப்படியாகிலும் சரியா, என்பதை அறிந்துகொள்ள. வாதத்திற்காக ஏற்றுக் கொள்வோம். அப்போதாவது, அன்பர் ஆச்சாரியார், மக்கள் தலைவராகத் தகுதியானவர்தானே? வாடும் மக்களின் வாட்டத்தை ஓட்டிய உத்தமர்தானே? மழை தந்த மகான் என்ற மதிப்பிற்கு உகந்தவர்தானே? துரோகிப் பட்டியலில் இருந்து தூரவிலகியோடி விட்டாரா? என்பதைப் பார்ப்போம்.

இந்த நாட்டு மக்கள் பதியால், பட்டினியால், தித்தார்கள், பல்லாண்டுகளாக. பார்த்துக் ருந்தார் உள் நாட்டு மந்திரி பதவியேற்ற ல்லியில்!

யதால், பஞ்சம் வந்தபோது தமாதாவின் புத்திரர்

கள் புரிந்துக் கொண்டிருந்தார்கள் என்ற செய்தி வெளியானது செய்தித்தாள்களிலே. கனம் ஆச்சாரியார் அதைக் கண்டு, பார்த்துக் கொண்டுதான் இருந்தார், கல்கத்தாவின் கவர்னராக.

நல்ல மழையில்லாததால், செல்லமாக வளர்த்த பிள்ளைகளை 'பிள்ளையோ பிள்ளை' என்று கூவிக் கூவி விற்றார்கள் என்றபோது பெரிதுவந்த, பெற்றோர்கள், பஞ்சத்தில், பட்டினியால்!

கவர்னர்களின் தலைவராக—கவர்னர் ஜெனரல் பதவியில் அமர்ந்து கொண்டு பார்த்துக்கொண்டிருந்தார் 'பஜகோவிந்த' பிரியர், இதனை!

உண்ண உணவில்லாத காரணத்தால், பேயைப் போலப் பிணத்தைத் தின்றான்—பைத்தியக்காரப் பட்டம் பெற்ற பிகாரன் ஒருவன். ஆச்சாரியார், உள் நாட்டு இலாக அமைச்சராக அமர்ந்து, அமைதியாக அதைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

ஏன்? உணவு மந்திரி கனம் முன்ஷி பஞ்சத்தை ஓட்டி, மழை பெய்விக்க, 'மரம் நடும்' விழாவை நடத்த வேண்டும் என்று கூறி பாமர மக்களின் பணத்தைப் பாழாக்கியபோதத்தில், பார்த்துக் கொண்டிருந்தார் ஆச்சாரியார்.

'பணம் ஏன் பாழாக வேண்டும். பஞ்சம்ப மழையைத் தருவிக்க என்னிடம் 'பஜகோ மந்திரம் இருக்கிறது என்று கூறி. இந்த கள் பஞ்சப் பேயின் கோரக் க சீரழிந்து, சித்திரவதைப் படுவ வில்லை, ஆச்சாரியார்.

ஆனால், அதே ஆச்சாரியார், முதலமைச்சர் பதவியேற்ற பிறகு, தனக்குத் தக்க பலத்தை ஏற்படுத்திக் கொண்ட பிறகு, தானே பஜ்ஜோவிந் தத்தை பிரார்த்தனையைப் பயன் படுத்தி மழை பெறும் வழியை எடுத்துக்காட்டியிருக்கிறார் !

மக்களும் இதனை, ஆச்சாரியார் அவர்களது பக்திப் போதனையைக் கேட்டு அப்படியே நடப்பதாகத் திட்டமிட்ட கட்டுப்பாடான பிரச்சாரம் வேறு மிக மிகப் பலமாக நடத்தப்பட்டு வருகிறது, நாடெங்கும்.

இதெல்லாம் எதற்காக ? காங்கிரஸ், கரைந் துள்ள காங்கிரஸ் கட்சியின் பலமற்ற, ஆதாரமுமற்ற ஆட்சிப்பீடத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தானே ! வேறென்ன காரணம் தோன்றுகிறது ! சிந்தியுங்கள் !

அரசாங்கத்தின் முதல்வர், முதன் மந்திரி என்ற முறையிலே பவனிவரவேண்டிய ஆச்சாரி அவர்கள் 'மகான் என்றும், மாமுனிவர்' என்றும் காட்டப்பட்டு பிரச்சாரம் செய்யப்பட்டு மக்களின் பக்திப்போதையின் நடுவே, தமது கட்சியின் ஆட் சியை நடத்திட நினைத்திடும் போக்கன்றி வேறு ன்ன ? என்ன ? என்று கேட்கிறேன் !

,ச்சாரியார், மகாஜன மாமுனிவராக, மக்கள் டைத்திடத் துடித்திடும் தூயமனம் படைத்த றுகிறார் ? இல்லையே !

ள் இன்னல் அரசியல் வாழ்வை ன்று ஏற்றுக்கொள்வ

தாகக் கூறிடும் அரசியல் துறவும், மீண்டும் மீண்டும் துறவைத்துறந்திடும் தரிதமும் நமக்குக் காட்டிடும் காட்சி, கருத்து, பாடம், பயனுள்ள அரசியல் அறிவு தான் என்ன?

ஆச்சாரியார் மக்கள் துரோகி; குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்படவேண்டியவர் என்பது தானே?

ஆச்சரியமில்லை, தோழர்களே, ஆச்சரியமில்லை அன்பர் ஆச்சாரியார், குற்றவாளியாகக் கூண்டிலே நிறுத்தப்பட வேண்டும் என்று மக்கள் விரும்பிலும் அதிலொன்றும் ஆச்சரியமில்லை! ஏன்? எதனால்?

பல வருடங்கட்கு முன்னர் ஆச்சாரியார் அவர்கள், இந்த மாகாணத்தின் அரசியல் வாழ்விலிருந்து விலக்கப்பட்டார், விலக்கினர்கள், மக்களே!

அன்றுதொட்டு இன்றுவரை, பலப்பல வகளிலும் அவர் மீண்டும் இம்மாகாணத்தின் மூதமைச்சராகப் பதவி வகித்திட எத்தனையெத்தனையோ முயற்சிகள், பலப்பல உருவங்களிலே, பலமான முயற்சிகள் செய்யப்பட்டு, தோல்வியடைந்து, இறுதியாக இன்று மீண்டும் பிரதமராக, எப்படியே பஜுகோவிந்தப் பிரதமராகப் பவனிவருகிறார், சாரியார், நாட்டில்.

பசி, பசி என்று பட்டினியால் தவித்துத் துத் துவண்டனரே, மக்கள், அப்போது இந்த ஆச்சாரியார் வில்லை, பஜுகோவிந்தம்

குடும்பங் குடும்பமாக ஏழை நெசவாளர்கள் வீடு வாசல்களைத்துறந்து, ஊர் ஊராக, வீதி வீதியாகப் பிச் சையெடுத்துப் பட்டினியால் பட்ட பாட்டைக் கண்டும் கேட்டும், படித்தும் என் பஞ்சகோவிந்தம் பாடிப் பஞ்சத்தை, பசியை, பிணியைப் போக்கிட மூன்வரவில்லை, இந்தக் கனம் ஆச்சாரியார், என்று என் கேட்கமாட்டார்கள், மக்கள் ?

இந்த மாகாணத்தின் முதன் மந்திரியானதும் ஆச்சாரியார் ஒரு கூட்டத்தில் பேசியதை எப்படி மறக்க முடியும், மக்களால்.

'நான் கவர்னராக, கவர்னர் ஜெனரலாகக் கூடப் பதவி வகித்தேன். ஆனல் அவையெதுவும் இந்த மாகாணத்தின் முதலமைச்சர் பதவிக்குள்ள அதிகாரங்களை, நேரடியாக, நிஜத்தால் செலுத்தக் கூடிய, செய்யக்கூடிய அதிகாரங்களைப் படைத்தவை யில்லை,' என்ற கருத்துக்கொண்ட பேச்சை மக்க ளால் மறக்கமுடியுமா ? முடியாது, முடியவே முடியாது.

ஆம். ஆச்சாரியார், சென்னை முதலமைச்சர் பதவிமீது தனிப்பிரியம், பற்று, பாசம், ஆவல், ஆசை, மோகங்கொண்டு அதற்காகக் காத்துக் கொண்டேயிருந்தார் போலும் ! வேடிக்கை !

அவரை, ஆச்சாரியாரை மதியாது, அவரைப் பகடியில், காங்கிரஸ் மேலிடத்தார் முயன் றாலாது விரட்டிய இந்த நாட்டு காங்கிரஸ் கட்சிக்குள்ளிருந்த ஏற்பட்ட சூழ்நிலைதான்)

மீது அவருக்கிருந்த ஆத்திரத்தால், தன்னுடைய சுயநலத்தால்தான் அவர் சும்மாஇடந்தார், பசி, பிணி, பட்டினி என்று மக்கள் வாடியபோது, என்று தோன்றுதா, மக்களுக்கு, ஆச்சாரியரைப் பார்க்கும்போது ?

உண்மையிலேயே உத்தமராஞல், மக்கள்மீது, மக்களின் மனமகிழ்ச்சியின்மீது, மக்களின் நல்வாழ்வின் மீது காட்டங்கொண்டவராஞல், அவர், ஆச்சாரியார், என் பஞ்சகோவிந்தத்தைப் பத்திரப்படுத்தி வைத்தார், இத்தனநாளும், வெளியே விடாமல் சொல்லாமல் ? ஏன் ? ஏன் ?

கன்னை மதியாத, பிரதமராக்காத அரசியல் அழியட்டும். அதிகாரத்திலுள்ளவர்கள் அதனல் அல்லல் படட்டும். ஆட்சி நிலை குலையட்டும், நாட்டு மக்களின் அதிருப்தியின் காரணத்தால், என்ற ஓரவஞ்சனையா ? கேட்கத் தோன்றுதா; மக்களுக்கு? சிந்தித்துப்பாருங்கள், தோழர்களே, சிந்தித்துப் பாருங்கள் !

தனக்குக் குறுக்கே, தனது தலை தடைக்கற்களாக இருந்து, பட படாத பாடுபட்டு மக்களிடம் நம்பி களால்ஒதுக்கப்படவேண்டுமென் பஞ்சகோவிந்தம் அப்போது தெரி ஏன் சும்மாயிருந்தார் ?

தன்னுடைய தற்பெருமைக்க மகாண மக்களை மட்டற்ற பஞ்ச வாடவிட்டாரா ? மனிதாபி

வர், மகான் என்ற பட்டத்திற்கு, பாராட்டுதலுக்கு உரியவர்? தகுமா? முறையா? தருமந்தானு? என்று மக்கள் கேட்கிறார்களே! என் கேட்கமாட்டார்கள்.

வாதத்திற்காக மனுகொடுத்த மகான் என்று ஒப்பிலல், மக்களை வாடவிட்டு, வேடிக்கை பார்த்தவர், என்ற குற்றத்திற்காக, குற்றவாளி என்று என்னிறுத்தக்கூடாது, குற்றவாளிக் கூண்டில், குல்லாக பட்டரை.....?

—(●)—

பார்! பார்! பட்டணம் பார்!

இப்போது, பிரார்த்தனை, பஜ்ஜகாவிந்தம்பாடி, ஏதோ ஒரு சிறிது, மழை, பெய்யும்படி செய்தார். ஆச்சாரியார், மகான், மாமுனிவர்! கல்கிக் கூட்டத்தினரின், காங்கிரஸ் வட்டாரத்தின், கணக்குப்படி, பிரசாரப்படி!

எப்படியோ, சுயநலம், சுயலாபங் கருதியாவது எதையோ செய்யட்டும், சொல்லட்டும், மக்களுக்கு அதனல் மழை, மனமகிழ்ச்சி எல்லாம் கிடைக்க வழி, வகை இருந்தால்! நாமொன்றும் அதற்குக் குறுக்கே நிற்கமாட்டோம்; நல்லது, நன்மைதான் நாட்டினர்க்கு என்பதால்.

ஆனல் ஆச்சாரியார், ஏதோ பிரார்த்தனை பஜ்ஜகோவிந்தம் என்று கூறிக்கூறி மக்களை மதவாதிகளாக, பக்திப்போதையிலே தனையற்றவர்களாகச் செய்யக்கூ தான் நமது கவலை.

நாட்டின் முதலமைச்சர், கா. பினியை, பஞ்சத்தை, பட்டினி உருவான உபயோகமுமான திட்டம் செயலாற்றி, எதிர்க்கட்சியினரு ணம் கடைக்கவேண்டும் என் ஆசை எல்லாம்.

ஆச்சாரியாரோ, ஏதோ மக்களுக்கு, பக்தி, பஜனை, மதம் முதலியவற்றின் பேரால், இதுவரை இந்த காட்டிலே தோன்றி மறைந்த எத்தனையோ மதபோதர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் போல 'மழைக்குப் பஜனை, ப்ரார்த்தனை செய்யுங்கள். கவலை நீங்கக் கடவுளை வேண்டுங்கள் என்று கூறியிருக்கிறார்; வேறில்லை.

இது ஒன்றும் புதிய தத்துவமோ, தெரியாத போதனையோ அல்ல. பலர் பல காலத்திலே சொல்லிச் சொல்லிச் சென்றவைதான்!

ஆனல் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி ஆச்சாரியார் பஜனை பண்ணச் சொல்லவும் ஏதோ ஒரு சில இடங்களில் ஓரளவு, ஒரு சிறிது மழை பெய்யவும் (இயற்கையாகத்தான்) இவர் காட்டினிரின் கண்களிலும் கருத்திலும் மழையைக் கொணர்ந்த மகான் என்றும், மாமுனிவர் என்றும் காட்டப் வருகிறார் கட்டுப்பாடான பிரசாரத்தின்மூலம்.

கட்டிக்காரத்தனம் எத்தனை நாளைக்குச் ல்லமுடியும்?

தவியேற்ற ஆச்சாரியாருக்கு பஜ தி, ப்ரார்த்தனை இவைகளைத் தவிர ப கிடையாதா?

ப் போதனையும் பிரச்சாரமும் பாகும் போக்கில் மக்களை பகுத் வோர் மீது ஏவிவிடும் பணி

அவரது உள்ளெண்ணம் இதுதான் போலும்! பக்தியென்றும், பஜகோவிந்தப் பிரார்த்தனை யென்றும் கூறிக் கொண்டு, அதே நேரத்தில் 'நாட்டில் நாத்திகம் பரவுகிறது. பலப்பலபோர்வை களிலே நாத்திகப் பிரசாரம் நடைபெறுகிறது. நாட்டின் பண்பாடு பாழாக்கப்படுகிறது அதனைத் தடுக்கவேண்டும், பக்தியைப் பெருக்கவேண்டும்' என்று வேறு பேசுகிறார்!

கனம் ஆச்சாரியார், தமது நிலையற்ற நிலையை, முதலமைச்சர் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளச் சுற்று வழி தேடுகிறார்!

நாட்டு மக்களின் கவனத்தை மத, மூட நம்பிக் கைகளிலும், தேர், திரு விழாக்களிலும், பழைய சாஸ்திர சம்பிரதாயங்களிலும் திருப்பிவிட்டு, அதே சமயம் 'பார், பார், பக்திக்கு விரோதி பார், பதிதனைப்பார், நாத்தழும்பேறிய நாத்திகக்கும்பல் நாட்டில் நடமாடிடுவதைப் பார், நரகுங்கள் அக்கும்பலை,' என்ற கருத்துக்களையும் அள்ளித் தெளிக்கிறார்.

'பார், பார் பட்டணம் பார்', '
புறங்களிலே வேடிக்கை காட்டி
வேடிக்கைக்காரன் நிலையிலன்றே
நிலை குலைந்து கிடக்கிறது!

நாத்திகமென்றும், நாட்டின் பண்
தென்றும் பேசி விட்டால் வே
நடைபெறும் நல்ல பகுத்தறி

பயனற்றுக்குலைந்து பட்டுப்போய் விடும் என்று ஆச்சாரியார் கனவுகாண்கிறார்? வேடிக்கை நண்பர்களே, வேடிக்கை, விசித்திரமான வேடிக்கை!

பிரதமர் பரம்பொருளான பகவானுக்குப் பக்கபலம் தேடுகிறார், தமது பேச்சு, பிரச்சாரம் ஆகியவற்றின் மூலம்.

பகுத்தறிப்பணி, பிரச்சாரம் இந்த மாகாணத்திலே நடப்பதாலன்றோ, பாராள வந்தாரின் பகல் வேஷம் பளிச்செனத்தெரிகிறது, என்ற பதை பதைப்பு, அவரை இப்படியெல்லாம் பேசவைக்கின்றது.

ஐயோ பாவம், ஆச்சாரியாரே! என்று ஆறுதல் கூறுகிறேன், ஆச்சாரியாருக்கு!

'பார், பார் பட்டணம்பார்,' என்று சில கட்டிடங்களையும், காட்சிகளையும் மட்டுமே கண்டுவிட்டு நெடுநாள், பட்டணம் என்றால், பூதக் கண்ணாடியிலே கண்டவைதான் என்று நம்பிக்கொண்டிருக்கக்கூடும், மக்களால்.

...த்தையே நேரில் பார்த்தபின்பு, அந்...பவனுக்கு மதிப்பு, மரியாதை ...பாகும், தண்ணலே!

...ணம்பார் என்ற குரல் கேட்ட ...ர் மீண்டும் மீண்டும் பார்த்ததையே ...ாட்டார்களே!

...வதான் 'பார் பார் பக்திக்கு ...திகம் நாட்டில் நடமாடுது பார்,'

என்றுல் எத்தனை நாளைக்குச் செல்லும் இந்த வித்தை, வேடிக்கையெல்லாம்?

நாத்திகம் பரவுகிறது. பழம் பண்பாடு பறி போகிறது, என்ற ஆச்சாரியாரின் அலறலை, அவ சியமற்ற அர்த்தமுமற்ற அலறலைமட்டும் கேட்டு மயங்கி எத்தனை நாள் மக்கள் இருப்பர்? இருக்க முடியும்?

நாத்திகம் எது, ஆத்திகம் எது? பழம் பண் பாடு எது, புதிய பண்பாடு எது? கூறுகிறாரா, ஆச் சாரியார், ஒரு குறிப்பிட்ட வரம்பு, எல்லை வகுத்து திட்டமாகக் கூறமுடியுமா ஆச்சாரியரால்? முடி யாதே!

ஆத்திக நாத்திக வாதத்திலே இறங்கி நாட்டை ஆளவந்த ஆச்சாரியார் காலத்தைக் கழிக்கிறார், வீணுக.

'அவனன்றி ஓரணுவும் அசையாது,' 'எல் லாம் விதிப்படி தானே நடக்கும்,' என்ற ஆத்திகர் வழக்குப்படி, நாத்திகர் என்று ஆத்திகரால் கப்படுவோரின் சிந்தனையும், செய
'அவன்' இன்றி அசையாது என் இருக்கக்கூடாது? என்று கேட்
சர்வவியாபியும், சர்வ வல்ல ஆண்டவனுக்குப் பரிந்து பேச யார்? என்று என் கேட்கக்கூடா

இவ்விதம் கேட்டால், 'கடவு என்ற பழி, பட்டம்! எப்படி

தகும்? கடவுள் நிந்தனையென்று எப்படிக் கூறிடத் துணியலாம், இதனை?

கடவுள் தத்துவமும் போதனையும் பேதமும் அவர்கள் வாக்கே, வழக்கமே, பழக்கமே, அவர் கட்கு எதிராக இருக்கின்றதே!

மதம், சாத்திரம், சம்பிரதாயம், பழக்கம் வழக்கம் என்பதன் பேரால் எதையும் பேசலாம், செய்யலாம் என்று ஆச்சாரியார் மனப்பால் குடிக்கவேண்டாம் என்று எச்சரிக்கை செய்கிறேன், நான்.

மக்கள், மனம் காலவேகத்தோடு முன்னேறிப் பண்பட்டு வருகிறது என்பதை அவர் உணரட்டும், முதலில்.

தம்மை மறந்து, தமது நிலையை மறந்து அவர் பேசக்கூடாது; பெருந்தவறு.

தனது பிறப்பையும், பிறப்பிற்கென்று சாஸ்திர சம்பிரதாயப்படி, ஏற்பட்ட தொழிலையும் அவர் கடைப்பிடிக்கின்றாரா? ஏன் இல்லை?

ணை குலத்திலே பிறந்த அவரது பெண்
சுமி, வேறு குலத்தவரான தேவ
ன் வாழ்க்கைத் துணைவியானது
ப்படி? என்று மக்கள் கேட்குங்
பதை ஆச்சாரியார் மறந்துவிடக்

னி என்றால் அவர் பேச்சையெல்
கட்டு, கருத்தற்றுச் செய்யுங்கால

மல்லஇது என்பதையும் அவர் மறவாது நிறுத்தட்
டும் நினைவில், நன்றுக.

ஆச்சாரியாரைக் கேலி செய்திடக் கூறவில்லை,
இவற்றையெல்லாம். அவர் கூறிடும் மொழிகளுக்கும்,
போதனைகட்கும் நேர்மாறுக, முற்றிலுமே முரண்
பாடாக அவரே நடந்திடுவதைச் சுட்டிக்காட்டுகின்ற
அளவிற்குத்தான் குறிப்பிடுகிறேன் ; வேறில்லை.

ஒரு விதத்திலே, ஜாதிவிட்டு ஜாதி பெண்
கொடுத்த ஆச்சாரியார் நம் பாராட்டுதலுக்கு,
கலப்புமணம் என்ற அளவிலே நம்முடைய போற்
றுதலுக்கு உரியவர்தான் என்பதையும் நாம் மறக்க
வில்லை, மறக்கவும் மாட்டோம் என்பதை அழுத்தந்
திருத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

வேதமோதி, வயிறு வளர்க்கவேண்டிய பரம்
பரையிலே பிறந்த ஆச்சாரியார், சாஸ்திரத்தை
மீறி, சம்பிரதாயத்தைத் தாண்டி, ஆங்கிலக்கல்வி
கற்று, ஆளவந்தாராக ஆகியிருக்கிறார்!

அவரே கலப்புமணம் செய்து காட்டியிருக்கிறார்,
தமது குடும்பத்திலேயே.

கலப்புமணம் பெருகவேண்டும் என்று சமீபத்
தில் எப்படியோ, பேசியுமிருக்கிறார்.

இப்படிப்பட்ட ஆச்சாரியார், இத
மாறுக சலுகைத் தொழிலாளர்கள்
தொழிலை, சலுகையாளராகப் பி
லேயே ஏற்பட்டுப்போன பரம்
விடக்கூடாது, என்கிறார்!

எப்படி ஏற்பர், ஏற்கமுடியும் அந்தச் சலவைத் தொழிலாளர்கள், அய்யர் அய்யங்கார்களின ஆட்சியின் உச்சியிலே அலங்கார மாளிகைகளிலே அமர்ந்திருப்பதை அறிந்த பின்னரும்?

சிந்திக்கவேண்டும் ஆச்சாரியார். இதுபற்றி என்றுதான் கேட்கிறீரும்! சிந்திப்பாரா! ஆச்சாரியார்?

கடவுள், கடவுள் என்று கதைபேசி மக்கள் கண்ணை மூடி வழக்கங்களிலும் பழக்கங்களிலும் உழன்று கஷ்டப்படுவதைத்தான் மேலும் மேலும் காணவிரும்புகின்றீரா, ஆச்சாரியார்?

கடவுள் பேரில் பாரத்தைப்போட்டுவிட்டால், மனிதனுக்கு வேலைதான் என்ன?

மனிதனது சிந்தனை, அறிவு, ஆற்றல் எல்லாம் என்னவது?

அரசன், அரசாங்கம்தான் என்? ஆச்சாரியாருக்குத்தான் அமைச்சர் பதவிதான் என்? ஏன்?

எல்லாம் கடவுள்செயல் என்று சும்மா இருக்கக்கூடுமா?

தரியும் பண்புபடைத்த மனிதனின் சிந்தனை, தடை போடுவதற்கா, கடவுள் வேண்டும்?

இது திருப்தி தருமா? எடுத்ததற்கெல்லாம் பாரத்தைப்போட்டுவிட்

தத் தெளிவற்று எதையும் செய்வது, பேசுவது என்று யோசித்துப்பாருங்கள்.

'பார், பார், பகுத்தறிந்து பார், எதையும்; பரமாத்மா வாக்கென்றாலும் விடாதே; பார், பார் பகுத்தறிந்து பார் எதையும்,' என்பதே நமது விடை, வேண்டுகோள்.

'பார், பார் பட்டணம்பார்,' என்பதுபோல 'பார் பார் நாத்திகம் பாவுதுபார்,' என்று பதறிடும், ஆச்சாரியாருக்கும், மக்களுக்கும் இந்தப் பதிலையே அர்ப்பணிக்கிறேன்.

அண்ணலுக்குச் சொர்க்கம் !
ஆச்சாரியாருக்கு நரகம் !

அண்ணலுக்குச் சொர்க்கம்! ஆம்! அறிஞர் அண்ணலுக்குச் சொர்க்கம்! நாட்டுமேல நாத்திகப் பிரசாரம் புரிபவன் என்று ஆத்திகர்களால் தூற்றப் படும் அண்ணலுக்குத்தான்!

ஆச்சாரியாருக்கு நரகம்! மகான், மாமுனிவர் என்றெல்லாம் போற்றப்படும் இராஜகோபாலாச் சாரியருக்குத்தான் நரகம்!

இங்கல்ல தோழர்களே இங்கல்ல! மேலுலகிலே. இந்த மண்ணில் வாழும் மானிடர் தீர்ப்புமல்ல, மகேஸ்வரனின் தீர்ப்பு!

விசித்திரமான சேதிதான், நான் கூறுவது, உங்களுக்கு. ஆனல் உண்மையில் ஏன் நடக்காது, நடக்க முடியாது, என்று கேட்கிறேன்?

அகில உலகையும் படைத்து, காத்து, அழித் வதாகக் கூறப்படும் ஆண்டவன், மனித சக்திக்கு மகேஸ்வரன் அளித்திடும் 'கல்ல படித்தானை இருக்க முடியும்!

னைப் பற்றி ஆத்திகர்கள் குறிப்பிடும் ண்டே பார்த்தால் கூட ஆண்ட ர்ப்பிலே, அண்ணலுக்குத் தான்

சொர்க்கம் கிட்டும், ஆச்சாரியாருக்கு நரகந்தான் கிட்டும் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் எழுக்காரணமே!

ஆண்டவன், அனாதரட்சகன், அருட் பெருஞ் சோதி—தனிப்பெருங்கருணை, தீனதயாளன், தயாபரன், கருணாகரன் கருத்துக்கு எளியவன், காட்சிக்கு அரியவன், இனிமையாளன், விறுப்பு வெறுப்பு அற்றவன் என்றெல்லாம் ஆத்திகர்களால் வர்ணிக்கப்படும் ஆண்டவன் அளித்திடும் தீர்ப்பில் அண்ணாவிற்குச் சொர்க்கம் என் கிடைக்காது! நிச்சயமாகக் கிடைக்கும்!

அன்பே தெய்வம், அருளே ஆண்டவன்என்று கூறப்படுவது உண்மையானால் சொர்க்கம் அண்ணாவிற்குத்தானே!

ஆண்டவன் அண்ணாத்துரையையும் ஆச்சாரியாரையும் நிறுத்துப் பார்த்து நியாயம் வழங்கினால் கிடைக்கும் நியாயம் 'நல்ல தீர்ப்பு', வேறெதுவாக இருக்கமுடியும்?

நாத்திகனென்று அழைக்கப்படும் அண்ணாத்துரையைப் பார்த்து ஆண்டவன், 'எனப்பா உனக்கு இந்தக் கெட்டப் பெயர்,' என்று கேட்டால், அ
அண்ணா தரும் விளக்கம் ஒன்றே போ
ரது கருத்தையும், செய்யுங் கடமையை
கொள்ள, புரிந்து கொள்ள?

ஆண்டவன் ஆச்சாரியா
துரையையும் நிறுத்தி, அண்
'எனப்பா, நாத்திகனெ

றிருக்கிறாய் என்று கேட்பதாகவே ஒரு கணம் சிந்தனை செய்து பாருங்கள்.

இக்கேள்விக்கு அண்ணை என்ன பதிலளிப்பார்? அதையும் சிந்தித்துப் பார்ப்போம்!

'ஆமாம் ஆண்டவனே, காந்திகன் — அப்படித்தான் என்னை ஆந்திகனென்று கூறிக்கொள்வோர் அழைக்கின்றனர். அதற்காக நான் கவலைப்படவில்லை. நான் காந்திகனல்ல, நான் தான் உண்மையான, உம்மை நன்கு உணர்ந்து, மனிதனது கடமையைச் செய்திடும் ஆந்திகன்', என்பதாகத்தன் அண்ணலின் பதில் இருக்கும்.

இடை மறித்து, ஆச்சாரியார, (சட்டசபையிலே செய்வதுபோல) 'அக்கிரமம், அக்கிரமம் ஆண்டவா, அண்ணைத்துணை கூறுவது அனைத்தும் பொய். தங்களையே ஏமாற்றத் துணிந்து விட்டானே. துணிந்து கூறுகின்றானே நான் தான் உண்மையான ஆந்திகனென்று! நம்ப முடியாத, ஒப்புக்கொள்ளவும் முடியாத வார்த்தை, தேவா! இத்தகையோரால் நாடு எவ்வளவு சீர்கெடும், எவ்வளவு பாவங்கள் பரவிடும் என்பதைத் தங்களுக்கு நான் [illegible]க்குக் கூறவும் வேண்டுமா! எம்பெருமானே, [illegible]ட்கொள்ளும் பெருமானே, இவையெல்[illegible]கள் கண்டும் வாளாயிருப்பது ஏனை?''

[illegible]த்தான் கூறுவார். கூறுமவிருக்க முடி[illegible]

[illegible]கூறுவார், மேலும் கூறிடத்தான்

'ஆண்டவா, இந்த அண்ணைத்துரையும், இவனது கூட்டத்தினரும், ஓய்ச்சல் ஒழிவு என்பதே இல்லாமல்.....", என்று மேலும் தொடர ஆரம்பிக்கும் போதே, அறிஞர் அண்ணைத்துரை 'ஆண்டவனே ஆச்சாரியார் சொல்லப்போவதை நானே கூறிவிடுகிறேன், ஒப்புக்கொள்கிறேன். மறுக்கவில்லை.

'கேளுங்கள் ஆண்டவனே, கேளுங்கள் நான் நாட்டிலே என்னவெல்லாம் செய்கிறேன், சொல்கிறேன் என்பதை யெல்லாம் சுருங்கக் கூறிவிடுகிறேன்.

நானும் என்னுடைய கூட்டத்தினரும், அண்பர் ஆச்சாரியார் குறிப்பிட்டபடி ஓய்ச்சல் ஒழிவு என்பது ஒரு சிறிதுமின்றி, ஊர் ஊராக, நகரம் நகரமாக, என் பட்டி தொட்டிகளிலும் சுற்ச் சுற்றி வருகிறோம், சோம்போறியாக அல்ல, வேலையற்ற வீணர்களாகவுமல்ல.

எங்கள் வேலையே ஊர் சுற்றுவதுதான்!

'ஊர் சுற்றுவது என்பதெல்லாம் உம்மைப் பழித்தும், பலபட இழித்தும் பேசும் வேலைக்காகவேதான், ஆண்டவா. இவன் அப்பட்டமான நாண்திகன் என்பதை இப்போதாவது தெரிந்துகொள்ளுங்கள் தேவாதிதேவா' என்று அண்பர் யார் குறுக்கிடத்தான் செய்வார்! அவர் அப்படி!

'ஆம் தேவா, ஆம், ஆச்சாரி நான் ஏற்கிறேன், மறுக்க

வேலையே என்று கூறுவது முழுதும் பொருந்தாது, எங்கள் வேலைகளிலே பலவற்றில், தங்களைப்பற்றி, ஆண்டவன் என்று எங்கள் நாட்டிலே பேசப்படும் தங்களைப்பற்றிப் பேசுவதும் ஆராய்வதும் ஒரு முக்கியமான வேலைதான் என்பதை முழுமனதோடு தெரிவித்துக் கொள்கிறேன். இல்லையென்று கூற வில்லை.

'ஆண்டவனே, தங்களைப்பற்றி மண்ணுலகில் மக்களிடையே பலதிறப்பட்ட உருவங்கள் கூறப்படு கின்றன. காட்டப்படுகின்றன!

பலப்பல குணங்கள், பல் வேறு நிகழ்ச்சிகள் தங்கள் போல் கூறப்படுகின்றன.

ஆண்டவன் அவதாரங்களென்றும், திருவிளை யாடல்களென்றும் இன்னும் எத்தனை எத்தனையோ கணக்கிட்டுக் கூறமுடியாத அளவிற்குக் காணலாம், கேட்கலாம் மண்ணுலகில், பலப்பல.

இவற்றையெல்லாம் நாங்கள் கேட்கிறோம், காண்கிறோம். ஆத்திகர் என்று கூறிக்கொள் வோரைவிட, ஆண்டவனே! தங்களைப் பற்றிய எல்லாவிவரங்களும், மகான்கள், மாமுனிவர்கள், ஆண்டவன் தூதர்கள், மதபோதகர்கள், ரிஷி, [illegible]ர்கள், ஏன்? ஆண்டவனுகிய தாங்களே [illegible]ர்ந்தருளி, ரிஷிகள் கேட்டு தம் சீடர் [illegible]ால்லை, அவர்கள், வேதம், ஆகமம், இதி, [illegible]ம் என்ற பெயர்களால் நாட்டிலே [illegible]ள்ள அத்தனை தத்துவங்களும் [illegible]ார்க்கங்களும், மதங்களும்,

மதங்களைப் பற்றிய உண்மைகளும், அவற்றிற்கும் மனிதர்களுக்கும் உள்ள தொடர்புகளும் எங்களுக்குத்தான் மிக மிக நன்றாகத் தெரியும்; புரியும்.

'புரிந்து என்ன பிரயோசனம். புத்தியெல்லாம் நிரைவர வாதம் பண்ணத்தானே பயன் படுகிறது' என்று ஆச்சாரியாரும் அவரைப் போன்றவர்களும் ஆயாசப்படுவதை நாமே எனது தோழர்களோ கவனிக்காமலில்லை; கவனித்துத்தான் வருகிறோம், ஆண்டவா!

ஆண்டவனே! மன்னிக்க வேண்டும். இத்தனையும் தெரிந்தும் எங்களுக்கு, எமை தங்களிடம் - ஆண்டவனிடமே, அதாவது உலகத்தில் நடமாடிடும் ஆண்டவர்களிடமே, எங்களுக்குச் சந்தேகம் தோன்றத்தான் தோன்றுகிறது, என்பதைத் தங்களிடமே தெரிவித்துக் கொள்ள ஒரு சிறிதும் தயங்கவில்லை.

சந்தேகம்! ஆம் தேவா சந்தேகந்தான். அதுவும் தங்களிடமே சந்தேகம். உங்களால் படைக்கப்பட்ட உலகத்தில் உழலும் நாங்கள், உங்களால் படைக்கப்பட்ட நாங்கள்—நாங்கள் சந்தேகப் படுகிறோம். சர்வ வல்லமை யுள்ளவர், சர்வவியாபகமானவர் என்று உங்களைப் பற்றி வியாக்கியானம் செய்கிறார்களே, அதையே சந்தேகிக்கிறோம்.

ஆம் தேவா! உண்மையைக் கூறுகிறோம்! நாங்கள் தங்களைச் சந்தேகிப்பதற்குக் காரணம், யாவரும் எங்களைப் புகழ்வார்கள் என்ற பேரும் புகழும் பெறவேண்டும் என்ற பிறந்ததல்ல எங்கள் சந்தேகம்.

நாங்கள் சிந்திக்கிறோம்; அதனால் சந்தேகப்படுகிறோம். நாங்கள் எண்ணுகிறோம்; அதை எடுத்துரைக்கிறோம். எதிர்ப்பார்க்கலே என்று அஞ்சிடாமல், எண்ணுவதை - அது உண்மை யென்று உணர்வதால் உரைக்கிறோம், உலகிற்கு. தவறென்ன தேவா, இதில்!

தங்களைச் சந்தேகிக்கும் வண்ணம் - தங்களை சர்வேசுவரனை, சந்தேகச் சந்தையில்தானே நாங்கள் சந்திக்கும் சந்தர்ப்பத்தை, பக்தகோடிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள், மண்ணுலகில்.

'ஆண்டவன் உண்டா? இல்லையா' என்ற ஆராய்ச்சியே நடக்குமளவுக்கு உங்களைச் சந்தேகக் சொருபிகளாக ஆக்கி விட்டார்களே, ஆண்டவா, உங்கள் அடியார்கள்.

"ஆண்டவன் ஒருவன் இருக்கிறான். அவனன்றி ஓர் அணுவும் அசையாது - எல்லாம் அவன் செயல் - இதை நம்பு"—இப்படிச் கூறுகிறார்கள் தேவா, ஆத்திகர்கள். அதோடு விட்டு ட்டால்கூடத் தவறில்லை.

"நம்புங்கள் நாங்கள் சொன்னவற்றை! நம்பாவிட்டால் நாசமாகப் போவீர்கள்! நரகத்தில் உழல்வீர்கள்! நம்பினால்தான் சொர்க்கம்! சுகவாழ்வு! நாங்கள் கூறுவதைச் சந்தேகக் கண் கொண்டு சற்றும் பார்க்காதே! சந்தேகிப்பதே பாவம்! ஆண்டவன் உண்டா, இல்லையா என்று யோசிப்பதும் பாவம்!

னை செய்யாதே! நம்பு! நம்பு!" என்று வற்
, நாங்கள் சந்தேகிக்கிறோம். 'நம்பு நம்பு'
ன் வற்புறுத்தல்தான் எங்களைச் சந்தே
சர்வேசா!

"நம்பு - ஆண்டவன் உண்டென்று நம்பு. அவனால் தான் எல்லாம் நடக்கிறதென்று நம்பு - அவனுக்காக எல்லாவற்றையும் செய்; உனக்காக எதையும் செய்து கொள்ளாதே. செய்துகொண்டால், சுயநலக்காரனாவாய்! ஆண்டவனுக்காகச் செய்! எல்லாம் அளித்த இறைவனுக்காக எதையும் செய்! அவனுக்கு கண்ணைப் பறிக்கும் ஒளி பொருந்திய பொன்னை ஆபரணமாக்கி அணிவி! பணக்காரர்களும் பார்த்து திகயிக்கும்படிப் பட்டாடை அணிவி! தூசைசெய்! படையல் போடு! பக்தனாகு!" என்று கூறுகிறார்கள்.

உங்களுக்குச் சாதாரண மனிதர்களுக்குத் தேவையான அளவைவிட அதிகமாகத் தேவை என்று அவர்கள்—ஆத்திகர்கள் கூறுகிறார்கள் தேவா! பேராசைக்காரனாக உங்களைக் காட்டுகிறார்களே, அவர்கள்! இதை நம்பச் சொல்கிறார்களே, எங்களை! எப்படி ஏற்போம், 'ஆசை அற்ற ஆண்டவன் பேராசைக்காரன்' என்ற வேடிக்கைக் கதையை!

ஆசை - அணுவணுவாக ஆறறிவு படைத்த மனிதனையே அரிக்கும் ஆசை - எவருக்கும் இருக்கக் கூடாத ஆசை எத்தனையோ வகைப்படும். மனிதனைப் பித்தனாக்கும் பெண்ணாசை - பெரியவனாக்கும் பொருளாசை - மிருகமாக்கும் கொடிய ஆசை இப்படிப் பல ஆசைகள் உள்ளன.

ஆசையற்ற ஆண்டவனை அடைய, எவ்[illegible]திதம
ஆசையுமற்று இரு. ஆனால் ஆண்டவனி
இரு! அந்த ஆசையை, அவன்-அடியா
தன்னைத்தானே சித்திரவதை
கொடிய உள்ளமுள்ளவனுமா

இவ்வளவும் ஆசையற்ற ஆண்டவனிடம் ஆசை செலுத்திட!

ஆனால் அந்த ஆசையற்ற ஆண்டவன்.....? கோட்டை கொத்தளங்கள் போன்ற கோவில்கள் - மாடமாளிகைகள் நிறைந்த மாநகரைச் சுற்றி யிருக்க வேண்டிய மதில்கள்-குபேரனைப் பிச்சைக்காரனுக்கிடும் பொற்குவியல்கள் - இவ்வளவும் ஆசையற்ற ஆண்டவனுக்குப் பக்தர்கள் தரும் காணிக்கைகள்!

அது மட்டுமா? அவனுக்குப் பக்கத்தில் பாவையர் வேறு! பக்கத்திலே ஒன்று, அப்பரமனின் தலையிலே ஒன்று! இப்படிப் பலப்பல நிலையிலே ஏராளமான இறைவன்கள்!

ஸ்ரீரங்கத்திலே, மகாவிஷ்ணுவுக்கு மட்டையடித் திருவிழா! மணந்த மங்கையை மாதேவன் விட்டுவிட்டு, வேறொரு விற்புருவ வேற்கண்ணனை விழைந்து - பின் அவனையும் விட்டு, தொட்டுத் தாலி கட்டிய, முன் விட்டுப் பிரிந்த மனைவியை நாட, அவள் ஊடல் நாடகம் ஆட - பின் மட்டையால் மணந்தவனை அம்மாதரசி அடிக்க - அதை அடியவர்கள் பார்த்து அகமகிழும் மட்டரகத் திருவிழா, மட்டையடி விழா! ஆசையற்ற ஆண்டவன் கைப்பிடித்தவனை விட்டு கணிகையை நாடியனும். இப்படி ஒரு விழா! நடக்கிறதே!

ஓ....! இது மட்டுமா? நிர்வாணக் கலையை ரசித்து சிக சிகாமணியாக ஆக்கியிருக்கிறார்களே! அழகின், சதியின் பதிவிரதத்தைப் க்கல், அளித்தல், அழித்தல் என்ற ரிய மூவர்கள் - மும்மூர்த்திகள்

நிர்வாணமாக நின்று பிச்சையிடும்படி கேட்டார்களாம்! என்னே, இறைவர்களின் இச்சை!

மூடியவில்லை தேவா, இவ்வளவோடு! இயற்பகையின் இறைப் பக்தியை உலகுக்குக் காட்ட, அவனது கர்ம பத்தினியையே தானம் கேட்டாராம், தயாபரன்!

தாருகா வனத்து ரிஷி பத்தினிகளிடம் தகாத முறையில்—வேடத்தில் தயாபரன் செய்த திருவிளையாடல்கள் சொல்லத்தரமன்று!

மயக்கம் வருகிறதா தேவா! பயப்படாதீர்கள்! சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். எம்பிரான்கள் நடத்திய திருவிளையாடல்கள் ஒவ்வொன்றும் "சிருங்கார லீலைகள்" என்ற தலைப்பில் வெளியிடத் தகுதியானவை. தவறிருந்தால் கூறுங்கள் தேவா!

ஆசையற்ற ஆண்டவன், அற்ப ஆசையிலிருந்து, ஆசையின் எல்லைக் கோடு எனத் தகும் பேராசை வரையில் ஓராசையையும் விட்டு வைக்கவில்லை. இப்படி நான் கூறவில்லை, இறைவா! உங்கள் அன்பிற்குகந்த அடியவர்கள் அருளிய "பொன் மொழிகள்" தான் இவை.

பொன் மொழிகள், புராணம், இதிகாசம், வேதம் என்பனவற்றிலெல்லாம் காணப்படும் பொன் மொழிகள்தான் இவை யெல்லாம்!

ஆசையை-மனித வாழ்விலிருந்து, வ
என்ற எண்ணத்தையே விட்டொழித்துப்
டும், போகவேண்டும்; போகிற கதிக்
தேடவேண்டும், புண்ணியம் தேட

டும் என்று தானே மக்களுக்கு இந்தப் பொன் மொழி கள் புகட்டுகின்றன!

நான், புண்ணியங் தேடவேண்டாம், போகிற கதிக்கு நல்ல வழியும் வகையும் தேடக்கூடாது என்று தடை போடவில்லை, போடவும் மாட்டேன்.

ஆனல் புண்ணியம், போகிற கதிக்கு நல்லது, நல்ல வழி என்று கூறுகிறார்களே, ஆத்திகர்கள், அவற்றைத் தான் ஆராய்ந்து பார்க்கிறேன், ஆராய வேண்டாம் அது மிகப் பாபம் என்பதையே மறுக்கிறேன, தடுக்க வேண்டும் என்றும் கூறுகிறேன்.

"தடுக்க நீயார்! தயாபரன் இல்லையா தவறு செய் தோரைத் தண்டிக்க?" என்று ஆச்சாரியார் கேட்கலாம். அந்த வேலையை நான் வைக்கவில்லை, ஆச்சாரியாருக்கு! கேள்வியை தானே கேட்டு, தேவையான பதிலையும் தருகிறேன்.

நான் தடுக்கிறேன். துடிப்புள்ளவன், என்ற கார ணத்தாலா தடுக்கிறேன். ஆத்திகர்களைத் தடுத்தேன் என்ற பட்டத்தைத் தேடிக்கொள்ளவா தடுக்கிறேன். விவாதத்தில் வெற்றிபெற்ற வீரன் என்று கூறிக்கொள் ளவா தடுத்தேன். ஆத்திகர்கள் மீதிருக்கும் ஆத்திரத் தாலா தடுக்கிறேன். இல்லை தேவா! இல்லை! அவ்வளவு தாரம் இழிகுணமுள்ளவனல்ல, நான்.

பின் ஏன் தடுக்கிறேன் என்று கேட்கிறீர்களா? தி நவா! நான் தடுக்க வில்லை! திகைக்காதீர் வன் என்ன பித்தலாட்டக்காரனுயிருக் து இல்லையென்று சாதிக்கிறனே? க் ஆண்டவனுகிய என் முன்னே

கூறுகிறானே" என்று நினைக்காதீர்கள்! நினைப்பில் வேறு விதமாக எதையும் தீர்மானிக்காதீர்கள்.

உண்மையைத்தான் கூறுகிறேன். நான் தடுக்க வில்லை. என்னைத் தடுக்கும்படி செய்தது, தேவா, நீங்கள் தந்ததுதான். "அப்படி எதைத் தந்தோம்" என்று யோசனையில் ஆழ்ந்துவிட வேண்டாம், ஆண்டவனே! அதையும் நானே கூறிவிடுகிறேன்.

நீங்கள் படைத்த மிருகத்திற்கும், மனிதற்கும் வித்தியாசமாக இருப்பதாகக் கூறும் பகுத்தறிவை நீங்கள் மனிதற்கு அளித்ததாக மற்றவர்கள் கூறுகிறார்களே, அந்தப் பகுத்தறிவு தான் என்னைத் தடுக்கும்படி சொல்கிறது; தூண்டுகிறது.

அந்தப் பகுத்தறிவு என்னைமட்டும் தூண்டவில்லை தேவா! என்னைப்போல எண்ணற்றவர்களைத் தூண்டி யிருக்கிறது. எனது நாட்டில் மட்டுமல்ல, இந்த அகில உலகிலும் ஆயிரக்கணக்கானவர்களைத் தூண்டி யிருக்கிறது.

அவர்களை யெல்லாம், தூயவர்கள் என்று தங்களை கூறிக் கொள்ளும் உங்கள் அடியவர்கள் என்ன கொடுமை செய்தார்கள் தெரியுமா? அதுவும் ஆண்டவ ராகிய உங்கள் பெயரைக் கூறி—அன்பின் பெயரைக் கூறி—அன்பின் அடிப்படையில் எழுந்ததாகக் கூறும் மதத்தின் பெயரைக் கூறி அவர்களை—அந்தப் [illegible]த் தறிவு வாதிகளை—துயர் துடைத்தத் சொல்லொணாத் துன்பத்திற் குள்ளாக்கி யி அவர்கள் அடைந்த துன்பம் என்னென் கனைக்குத் தெரிந்திருக்குமே! ஒரு

கூறுகிறபடி நீங்கள் வேறு வேலைகளில் ஆழ்ந்திருந்தால், மறந்திருக்கலாம், அவற்றை! ஆகவே கூறுகிறேன். அவற்றைக் கேளுங்கள்.

இதெதடா இவன் விடாக்கண்டனாக இருக்கிறானே என்று எண்ண வேண்டாம் தேவா! அலட்சியப் படுத்தாமல் இலட்சிய வாதிகள் பட்ட இன்னல்களைக் கேளுங்கள்!

கிரேக்க காட்டுப் பேரறிஞன் சாக்கரடீஸுக்கு, நீங்கள் தந்த பகுத்தறிவைப் பயன் படுத்தினான் என்ற ஒரே காரணத்திற்காக ஒரு கோப்பை நஞ்சைத் தந்தனர். நஞ்சினும் கொடிய வஞ்சகர்கள்.

ஆண்டவன் கல்வியும் செம்பியும் கட்டுப்பட்டிருக்கவில்லை என்ற நடிகாயகத்தை கல்லாலடித்தார்கள், கயவர்கள்.

"கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக" எனக் கூறிய வள்ளலாரை 'சோதி'யில் கலக்கச் செய்தார்களே!

எண்ணாயிரம் சமணர்களை 'அன்பே கடவுள்' என்ற தத்துவத்தின் அடிப்படையிலே எழுந்த சைவ மதத்தின் பெயரால், கழுவேற்றினர்களே!

ஆண்டவனே! என்னை முடியாதவர்கள் - அனேகர். இப்படிக் துன்பப்பட்டுத், துடிதுடித்து இறந்தார்களே! ள் தந்த பகுத்தறிவைப் பயன்படுத்தினர் த்தி உண்மையை அறிந்தார்கள்—அறிந்த னவர்க்கும் கூறினர்கள், சுயநலமில் இருந்தார்கள் என்ற காரணங்

களுக்காக அவர்கள் மாண்டார்களே, மாளும்படிச் செய்யப் பட்டார்களே!

இருபதாம் நூற்றாண்டில்-நாகரிகத்தின் சிகரமான இந் நூற்றாண்டில்—வாழ்கின்ற காரணத்தால் தானே என்னவோ நாங்கள் அவ்வித கொடிய துன்பங்களுக்கு இலக்காகவில்லை, இலக்காக்கப் படவில்லை என்று எண்ணவேண்டி யிருக்கின்றது.

அறிவு—ஆராயும் திறன், சிந்தனை, சிந்தனையின் விளைவால் ஏற்பட்டிடும் தெளிவு, மனிதர்களின் முன் னேற்றத்திற்கு—மனித வாழ்வின் வளத்திற்குப் பெரி துதும் பயன்படுகிறது. என்பதைத் தெரிவிப்பது, எடுத் துக் கூறுவது குற்றமா? ஆண்டவா! தங்களுக்கு விரோத மான செயலா?

"பகுத்தறிந்து பார்," எதையும், என்று எங்களை நாங்களே கேட்டுக்கொள்கிறோம். தவறு? தர்ம நீதிக் குப் புறம்பானதா? ஆண்டவனுக்கு எதிரான புரட்சியா, சிந்திப்பது, என்று கேட்கிறேன், தங்களையே?

கேள்விகள் கேட்கிறோம், சிந்தனையின் விளைவால்! கூடாதா! அடாதா! தகாதா?

மனிதன்- 'மகேசனது பக்தனாக வேண்டும், தனது வாழ்வையே மகேசனுக்குப் பணி செய்வதிலும், மகேச னுடைய புகழைப் பாடுவதிலும் செலவழிக்க வேண் டும், அர்ப்பணிக்கவும் வேண்டும் என்று கூறுவதை; இதுதான் மனித வாழ்வின் இலட்சியம் எ வதை ஒப்பிட முடியவில்லையே, எங்களால்

எண்ணிப் பார்க்கிறோம், எல்லாம் வ எங்கும் நிறைந்த இறைவன் எ

இறைவன் என்றெல்லாம் ஏத்தியேத்திப் போற்றப் பட்டுப் பக்த கோடிகளும், பரமன் தூதர்களும் பாடி யாடி மகிழ்ந்திடும் இறைவன், வீருப்பு வெறுப்பற்ற அருட்பெருஞ்ஜோதி வடிவான இறைவன், அவனது படைப்பான 'மனித'ர்களின் புகழையும், பணிவிடை யையும், எதிர்பார்த்திருக்கும், ஏங்கிக் காத்துக்கிடக்கும் எளிய நிலையிலா, இருப்பார், இருக்க முடியும், என்று!

இந்த உலகத்தைப் படைத்து, இதிலே எண்ணி லாத இயற்கை வளங்களைப் படைத்து, விலங்குகளையும், விண்ணிலே பறந்திடும் பறவையினங்களையும் படைத்து இவற்றைவிட மேலான அறிவுடன், பகுத்தறிவுடன் கூடிய மனித இனத்தையும் படைத்த ஆண்டவன், தனது படைப்பின் உறுப்பினரான மனிதரிடமே, பகுத் தறிவற்ற கண்மூடித் தனத்தையா எதிர்பார்ப்பான்? எப்படி? எப்படி? என்று, ஒரு நாளல்ல, இருநாளல்ல, பல நாள், பலர் மிக மிகத் துணிவுடன் எண்ணியதின் விளைவால், விளைந்த கேள்விகள்தான், நாங்கள் கேட்டி டும் கேள்விகள், நாட்டில், என்பதைத் தங்களிடம் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பகுத்தறிவு-பகுத்துப் பார்த்திடும் அறிவு-ஆராய்ந் திடும் அறிவு-என்ற ஒரு அறிவு மட்டும் மனிதனிடம் இல்லாமலிருந்துவிட் டிருந்தால் இந்த உலகத்தில் ஆத் திக—நாத்திக வாதத்திற்கோ—வழக்கிற்கோ, அதன் ஏற்பட்டிடும் கொடுமைகட்கோ இடமே து என்று நினைக்கிறேன்.

—நாத்திகம் என்ற இரு வேறு நிலைகள் ணம், மனிதன் தனது வாழ்

வீன் இலட்சியத்தைத் புரிந்து, தெரிந்து கடைப்பதிலே, ஏற்பட்டுள்ள நிலையற்ற, நிம்மதியற்ற, தெளிவுமற்ற சூழ்நிலைதானே, ஆண்டவா?

வாழ்வின் இலட்சியம், மனித வாழ்வின் இலட்சியம், மனிதன் வாழவேண்டியதின் இலட்சியம் தெரியாத, தெளிவாகத் தெரியாத, தெளிவற்ற நிலைதானே, சூழ்நிலைதானே மனிதரிடையே மனக் கசப்பான, மனச் சங்கடமுமான போராட்டங்களை ஏற்படுத்துகின்றன?

இந்தத் தெளிவற்ற நிலையைத் தெரிந்து, புரிந்து, தெளிந்த நிலைக்குச் செல்ல மக்கள் துடிக்கின்றனர்.

துடிப்பு மக்களிடையே இன்று நேற்றல்ல, மனிதன் உலகில் தோன்றிய அல்லது தோற்றுவிக்கப்பட்ட அந்த அனாதி காலத்திலிருந்து இருந்து வந்தே இருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மைதானே!

துடிப்பு — வாழ்வின் விளக்கத்தை — வாழ்வின் நோக்கத்தை, என் வாழ வேண்டும்—எப்படி வாழ வேண்டும், எதற்காக வாழ வேண்டும்—வாழ்வதால் என்ன நலன், நன்மை, யாருக்கு-எதற்கு, எப்படி? என்ற கேள்விகள், இலட்சிய விளக்கத்திற்கான இலட்சியக் கேள்விகள் மனிதனது இதயத்திலிருந்து குமுறிக் குமுறிக் கிளம்பிக்கொண்டேதான் இருக்கின்றன, என்றும், தொடர் கதையாக, விளங்காத—விளங்கிக் கொள்ளவும் முடியாத பெருந் தொடர் கதையாக!

இந்த விளக்கம், வாழ்வின் இலட்சியத்தை கிடும் விளக்கம், மனிதனுக்குத் தெரியும் மனித வாழ்வு தொல்லையான வாழ்வாகத்தாகும்?

வாழ்வின் இலட்சியம்! மனித வாழ்வின் இலட்சி யந்தான் என்ன?

இந்த இலட்சியக் கேள்விக்கு விளக்கந்தர, விடை யளிக்கப் பலர் முன்வந்தனர், பலப் பல காலங்களிலும். என்றுமே விளங்கவில்லையே, சரியாக, தெளிவாக. என்ற நிலை தானே, இன்னும், இந்த நேரத்திலும்!

வாழ்வின் இலட்சியம் இதுதான் என்று தேடித் தேடி யலைந்தும் தெரிந்தபாடில்லை, மக்களுக்கு!

பிறப்பதும், பெண்டு பிள்ளைகளுடன் வாழ்வதும், சாவதும், இடையே போகிற கதிக்குப் புண்ணியம் தேடிடும் எண்ணந் தோன்றி, எல்லாம், வாழ்வின் முக் கிய பகுதிகள் அத்தனையும், புண்ணியம் தேடிடும் பட லத்திற்கே செலவிடப் படுகிறது, பெரும்பாலான மக்களால்!

வாழ்வின் இலட்சியத்தைப் பற்றி யோசித்து, யோசித்து வாழ்வை வீணுக்கிடும், இலட்சியமற்ற வாழ் வாகத்தான் மனிதர்கள் வாழவேண்டுமா? மகேசன் புகழ் பாடிப் பாடிப் புண்ணியந் தேடிடும் நிலைதானு வாழ்வின் இலட்சியம்? சரியா? போதுமா? பதில் கூறுங்கள்!

அந்திகனுக இல்லாமல், நாத்திகனு இருக்கிறேன். னல் என்ற கேள்வி கேட்கப்படுகிறதே, னைப் பார்த்து—இது என் எதனுல் என்று திருப்பிக் கேட்கவேண்டி யிருக்கிறது,

ஏன் என்னைக் கேட்கிறீர்கள், 'ஏனப்பா, நாத்திக னென்று கெட்ட பெயர் எடுக்கிறாய்" என்று? எந்தக் காரணத்தால் கேட்கிறீர்கள்?

நாத்திகன் என்று நான் கருதப் படுவதற்கும், அதனால் எனக்குக் கெட்ட பெயர் என்று கருதப்படுவதற்கும், என்னைவிட்டு வைத்தால்—நாத்திகனுகவே விட்டு வைத்தால், நாடு கெடும் என்று அச்சட்படுவதற்கும் ஆதாரங்களென்ன? கூறுங்கள் பதில்?

நான் என்ன சொல்கிறேன்—செய்கிறேன், நாட்டில் என்பதை மீண்டும் நினைவிற்கு கொண்டுவந்த பிறகு தீர்ப்புக் கூறுங்கள்!

நான் என்று கூறிடும் நான், என்னை மட்டும் குறிப்பிடவில்லை. என்போன்றாரின் எண்ணத்திற்கு, எண்ணியிருக்கிறேன் எனக்கு முன்னாலேயே தோன்றி மறைந்தவர்களையும், இன்றும் இருப்பவர்களையும் இனி இருக்கப் போகிறவர்களையும் சேர்த்தேதான் குறிப்பிடுகிறேன். நாங்கள் சொல்வதென்ன? செய்வதுதான் என்ன?

நாங்களா, நாத்திகர்கள்? நாங்களா, நாட்டின் நாசகாலத்திற்கு விதையூன்றுபவர்கள்? இல்லையே!

நாங்கள்தான், நாட்டுக்கு நல்லது சொல்வோர்—செய்வோர் என்பதை மிகத் தெளிவாகத் தெரிவிக்கிறேன்.

மனதார உணர்ந்துதான் இதனைக் கூ

மனிதன் இலட்சிய வாழ்வு வாழ வே
கான, வழி—வகை, சிந்தனைத் தெள

நம், ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லு கிறோம்—செயலாற்றவும் தவறிடவில்லை, நாங்கள்.

மனிதன் மனிதனுக வாழ வேண்டும்—அறிவோடு, ஆராய்ச்சியோடு, அன்போடு, தெளிவோடு வாழ வேண் டும்-மிருகத் தன்மை தலைகாட்டாமல், மனிதத் தன் மையோடு வாழ வேண்டும்-பிறரையும் வாழவிட வேண் டும் என்ற எண்ணத்தோடு வாழ வேண்டும்—அவ்வாழ் விற் கேற்ற வழி வகை முறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும், மனிதர் தம் அறிவால், ஆற்றலால்.

அதுமட்டுமல்ல, ஆண்டவனே! ஆற்றலால் அமைத் தவற்றை யாரோ அனுபவிக்கவிட்டு, அவன் அடிமையாக வும் அடிமையாகவும் வாழக்கூடாது, அதற்குப் 'பூர்வ ஜன்ம பலன்' என்ற போலி சமாதானத்தைத் துணைக் கழைக்கத்துத் திருப்பதியடையக் கூடாது! இதுதான் தேவா எங்கள் எண்ணம். இதற்காகத் தான் நாங்கள் உழைக்கிறோம். இதுவா தவறு? இதற்காகவா 'காத்திகர் கள்' என்ற பட்டம்? கூறுங்கள் தேவா, இது சரியா என்று?

மனிதன் அறிவைப் பயன் படுத்துகிறான், ஆற்ற லைப் பயன் படுத்துகிறான் — ஆக்குகிறான் பலவற்றை! ஆனால் அவை அவனுக்குரியவை அல்ல என்பதை அறிந்த போது, அவற்றைச் சொந்தமாக்கிக் கொண்ட சிலர் மீது பாயக்கூடாது, 'பாதகா! படுபாவி' என்று [illegible]க்கூடாது என்று ஆத்திக சிகாமணிகள் கூறுகிறார் வேடிக்கையாக இல்லையா, உங்களுக்கு!

வேடிக்கைக் கதைக்கு, ஆண்டவராகிய தாங் [illegible] என்று வேறு கதை யளக்கிறார்கள்.

அவன் அன்று எழுதியப்படி நடக்குமாம். 'அவன்' எழுதியதை மாற்றியமைக்க எவராலும் முடியாதாம், கூறுகிறார்களே அவர்கள், கூசாமல். அதுதான் கூடாது என்று குரல் கொடுக்கிறோம்! இது எப்படி நாத்திக மாகும்?

ஆக்கியவனுக்குத் தானே, ஆக்கப்படும் பொருள் உரியது. அதுதானே நீதி, நேர்மை. ஆனால் நீதிக்குப் புறம்பாக, நேர்மைக்கு விரோதமாக அவர்கள் கூறி விட்டு, அந்தத் தகாத செயலுக்கு உம்மையே தகுந்த காரணமாகக் கூறுகிறார்களே! தண்டிக்க வேண்டாமா, இந்தத் தவறு செய்த அவர்களை.

மீறிக் கேட்டால்" பொன்னு உன் பின்னால் வரப் போகிறது! பொருளா உன்னுடன் வரப் போகிறது. அவையெல்லாம் அழியக் கூடியவை. ஆகவே, அதைப் பற்றிக் கவலைப் படாதே! போகிற கதிக்குப் புண்ணியம் தேடிக் கொள்! அதுதான் உன்னுடன் வரும். உனக்கு 'அந்த' உலகில் அரிய துணையாக இருக்கும்" என்று உபதேசம் செய்கிறார்கள்.

ஆனால்.....அவர்கள், போகிற போது உடன் வராத பொன்னையும் பொருளையும் போராக்குவித்துப் பூட்டி வைக்கிறார்கள். அதைக் கண்டிக்கிறோம் தேவா பொருள் அழியக் கூடிய என்று அவர்கள் கூறினால், நாங்கள், அது அழிவதாகவே இருக்கட்டுமே, அழியும் வரை அதைப் பயன் படுத்திக் கொள், அது அறிவு இருக்கிறது என்று கூறுகிறோம். இதில் கூறுங்கள், இருந்தால்! பொருந் ருக்கு. 'நாத்திகர்கள்' என்ற பெ"

தேவா! தங்களைத் தாழ்த்தி—கீழ்ச் செயல்கள் புரிந்ததாகக் கூறி—நீதிக்கு விரோதமானவைகளுக்கு தாங்கள் தான் காரணம் என்று காட்டி—அதன் மூலம் தங்களிடம் கொண்டுள்ள பயம், பக்தி முதலியவைகளை ஓட்டி உங்கள் மேல் மக்கள் குற்றம் சாட்டிடும் நிலையை நாட்டிலே உண்டுபண்ணியிருக்கிறார்கள்—அந்த ஆத்திகர்கள்.

தங்களைப் பற்றித் தப்பாக ஏதும் சொல்லாத எங்களை—எண்ணியதை எதற்கும் அஞ்சாமல் எடுத்துரைக்கும்எங்களை-தங்களைகேலிச்சின்னமாக ஆக்கிடாத எங்களை நாத்திகர்கள்—நம்பிக்கை யற்றவர்கள்—நரகக் குழியில் தள்ளப்பட வேண்டியவர்கள்—என்றெல்லாம். ஆத்திகர்கள் — ஆண்டவனின் அடியார்கள் கூறிவருகிறார்கள்.

தேவா இப்போது கூறுங்கள் யார் நாத்திகர்? யாருக்குத் தேவை நரகம்—என்பதை!

ஆண்டவா தங்களால் படைக்கப்பட்ட, இந்த உலகம் மாயை, உடல், உயிர் அத்தனையும் மாயை, என்று மாயா வாழ்வு வாழச் சொல்லவில்லை, நாங்கள்.

நாங்கள், உலகம் உண்மை, உயிர்—உடல் யாவும் உள்ளவும் யாவும் உண்மை.

அறிவு - ஆற்றல் - ஆராயுந்திறன் - நன்மை யென்றும் தீமை யென்றும் பகுத்தறிந்திடும் பகுத்தறிவு [illegible]க்கொண்டு மனிதன் மனிதனாகவே, மக்களைக் [illegible]ரிந்து, மக்களைத் தானும் நல்ல வாழ்வு—வு வாழ்ந்திட வேண்டும் என்றுதான் கூறு

உண்மை பேசு, உண்மையைக் கடைப்பிடி என்று போதனை மட்டும் போதாது—எது உண்மை, ஏன் உண்மை என்று உண்மையைப் பற்றிய விளக்கந் தெரிந்து புரிந்து, சிந்தித்துச் சிந்தித்து முடிவு கண்டு உண்மை பேசவும், உண்மையைக் கடைப் பிடிக்கவு மான சூழ்நிலையை, சுற்றுச் சார்பை, மனிதனிடம், மனித சமூகத்தினிடம், மனித சமூதயாத்தினிடம் உண் டாக்கிடும் மகத்தான பணியிலீடுபட் டிருக்கிறோம். இதுதான் நாத்திகமா? கூறுங்கள் தேவா?

ஆத்திகம், ஆத்திகம் என்று கூறிக் கூறி மக்களின் சிந்தனை, செயல், செயல் முறை, செயல் திறன் ஆகிய வற்றிற்கு, முன்னேற்றத்திற்கே தடை போட்டு மக் களை, மாயாவாதத்திலீடுபடுத்திடும், ஆத்திகரின் கூற் றுக்களை. பேச்சுக்களை, புராணங்களை, பக்திப் பாராய ணங்களைப் படித்துக் காட்டி, கன்மை தீமைகளை, விளக் கிக் காட்டி, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' அன்பே தெய்வம், அருளே தெய்வம், அறிவே தெய்வம், என்று கூறி—அன்பு, அருள், அறிவு யாவும் ,மனிதனி டம், மனித இனத்திடம், உலகில் காட்டப்பட வேண்டி யவையே தவிர, எல்லாம்வல்ல இறைவனுக்கு மட்டுமே இவை உரியவை என்று பேசி, பக்தி கொண்டு, இவ் வுலகை மறந்து, அவ்வுலகை நோக்கிப் பாடிக் கொண் டும், ஆடிக் கொண்டும், மக்களை மறந்துவிட்டு வாழுமாதீர்!

அன்பு—அருள்-அறிவு, மக்களிடை வெ டுங்கள். மக்களெல்லாம் அன்புருவாய், அ அறிவுருவாய் விளங்கிடும் நிலை

வாழ்க்கையை, வாழ்க்கையின் முறையை, வளத்தை வசதியை — சுருங்கச் சூழ்நிலையை மாற்றி யமைத் திடுங்கள்—அன்பு—அருள்—அறிவு என்ற மூப்பெரும் படையை, பகுத்தறிவுப் படையைக்கொண்டு, என்பதே எங்கள் எண்ணத்தின் எதிரொலி—வாழ்வு—வாழ்வின் இலட்சியம், என்று கூறி முடித்துக் கொள்கிறேன். என்று அண்ணல் முடித்திடலாம். இவ்வளவையும் கேட்ட, கவனித்த ஆண்டவன் என்ன செய்வார்....?

அண்ணல்தான்—இதோ உனக்குச் சொர்க்க வாசல் என்றுதானே கூறுவார்? கூற முடியும்.

மேலும் ஆச்சாரியார் விடாப்பிடியாகத் தமது போக்கிலேயே இருந்திடின் 'அனுப்பு ஆச்சாரியாரை, நரகத்திற்கு' என்று ஆண்டவன் அனுப்பினால், அதி லென்ன ஆச்சரிய மிருக்க முடியும் என்று கேட்கிறேன், தோழர்களே.

ஆகஸ்டு கிளர்ச்சி!

அடையாளக் கிளர்ச்சிதான்!

ஆகஸ்டு கிளர்ச்சி! ஆகஸ்டு கிளர்ச்சி! அருமையான சொற்றொடர்! அர்த்தமுள்ள சொற்றொடர்! அனைவர்க்கும் அறிமுகமான சொற்றொடருங் கூட!

ஆம். நண்பர்களே, ஆம், ஆகஸ்டு கிளர்ச்சி என்றதும் மேற் குறிப்பிட்ட எண்ணந்தான் தோன்றுகிறது. தோன்றுவது மட்டுமல்ல, அதிலே பொதிந்து கிடக்கும் உண்மையைக் கண்டு களிப்பும் ஏற்படுகிறது எனக்கு; எனக்கு மட்டுமல்ல, எண்ணத் தெளிவுள்ள எவருக்குமே ஏற்படத்தான் ஏற்படும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை என்பதும் உறுதி.

ஆகஸ்டுப் புரட்சி, ஆகஸ்டுப் போர்—ஆகஸ்டுத் தினம்—ஆகஸ்டுத் தியாகி—ஆகஸ்டு வீரன் என்பன போன்ற பேச்சுக்கள் நமது செவிகளிலே 1942-ம் ஆண்டிலிருந்து ஒலித்துக் கொண்டேதான் இருக்கின்றன!

அதே நேரத்தில் நமது நினைவிற்கு, நமது நினைவிற்கு மட்டுமல்ல, நாட்டின் அனைவரின் நினைவிற்குமே—அந்த ஆகஸ்டு மாதத்தில், 1942-ல் நிகழ்ந்த கட்டாயம் நினைவிற்கு வரத்தான் செய்

ஆகஸ்டு—1942 ம் ஆண்டு ஆகஸ்டு ம
அகிம்சையின் அவதாரங்கள் று கூ

கும் காங்கிரஸ்காரர்கள்—வெள்ளைக்காரர்களை நாட்டி லிருந்து விரட்டுவதாகக் கூறிக்கொண்டு நாட்டிலே நாலு விதமான நாசகாரியங்களையும், தேசியத்தின் பேரால், தேசத் தொண்டின் பேரால் நடத்தினர் என் பதை மறந்துவிட முடிவதில்லை எவராலுமே!

ஆகஸ்டுத்தனம் என்று அன்று முதல் குறிப்படப் பட்டும் வரும் அந்தத் தேசியத் திருவிளையாடல்களால் அந்த மாதமே, ஆகஸ்டுத்தனம் என்ற சொல்லே கரை பட்டு விட்டது என்பதில் சிறிதளவும் சந்தேகமே இல்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மைதானே!

ஆகஸ்டுத்தனம் நாட்டிலே அமைதியைக் குலைத் தது. எதும் அறியாத நமது நாட்டு மக்களையே அல்ல லுக்கு ஆளாக்கியது. நமது நாட்டு மக்களையே, அதிகா ரத்தில் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காகப் படு காயப்படுத்தியது என்பது மட்டுமல்ல, பலரைப் படு கொலையும் செய்தது, தேசம், தேசியம் என்று கூறிக் கொண்டு!

பல அதிகாரிகள் தீயிலிட்டுக் காயப்படுத்தப்பட்ட னர். சிலரின் சிறந்த சிங்கார முகங்கள் தீத்தன்மை யுள்ள எரித் திராவகங்கள் ஊற்றப்பட்டுப் பாழாக்கப் பட்டன.

வீடுகள் தீக்கிரையாயின, நமது நாட்டிலே. தபால், ந்தி நிலையங்கள் தகர்த் தெறியப்பட்டன, கொளுத்தப் தியத்தின் பேரால்.

ரயில்கள், இடையிலே விழும்படி செய்யப் ள்ளையரை விரட்ட இதுதான் வழி என்று ாக நமது மக்கள் (வெள்ளை

யரல்ல) இரயில் பிரயாணிகள் பலப்பல அவதிகளுக்கு ஆளாயினர்; ஆளாக்கப்பட்டனர்.

எத்தனை எத்தனையோ கொடுமைகள் ஆர்ப்பாட்டங்களின்போரால், ஆங்கிலேயருக்கு எதிர்ப்பு என்பதன் போரால் தடந்தன, தடத்தப்பட்டன, அப்போது.

ஆகஸ்டுத்தனம் ஒரு வெறியாட்டமாக, மக்களின், எந்த தேசியத்திற்காகப் போராடுவதாகக் கூறினரோ, கூறிக்கொண்டனரோ, அந்தத் தேசமக்களின் உரிமை-உடைமை—உயிர் அத்தனையையும் ஊசலாடிடும் அளவிற்கு வேதனையைத் தந்தது, 1942 ல்.

இந்தக் கரை—களங்கம்—ஆகஸ்டு மாதத்திற்கு ஏன்? ஆகஸ்டு மாதம் என்ன செய்தது என்று நீனைத்தோம்.

ஆகஸ்டுத்தனம்—அயோக்கியத்தனம்—அராஜகத்தனம்—அறிவற்ற காட்டுமிராண்டித்தனம் என்பதை. அதே மாதத்தில் நல்ல நல்ல காரியங்களைச் செய்து, அந்தக் கரையை, களங்கத்தைப் போக்கவேண்டும், நீக்கவேண்டும் என்ற முறையிலே நமது அறப்போர்—கட்டாய இந்தியை எதிர்த்து நடந்த மொழிப்போர், 1948-லும் சரி, இப்போதும் சரி, ஆகஸ்மாதத்திலேயே துவக்கப்பட்டு, ஆகஸ்டு மாதம் ஒரு நல்ல மாதமாக, மாறி விட்டது என்பது ஒரு நல்ல செய்தியாகிவிட்டது கண்டு களிப்படைவதில் தவறென்ன தோழர்களே!

ஆகஸ்டுக் கிளர்ச்சி! ஆகஸ்டு மாதம், டம் ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று யுள்ள அத்தனை இரயில்வே நிலையங்களை

பெயர்ப் பலகைகளிலுள்ள இந்தி எழுத்துக்களைத் தார் கொண்டு அழித்துவிடுவது—மறைத்துவிடுவது என்று முடிவு செய்தோம்—செய்யப் போகிறோம்.

இரயில்வே நிலையங்களிலே உள்ள இந்தி எழுத்துக்கள் மட்டுமல்ல, தபால், தந்தி நிலையங்களில் பெயர்ப் பலகைகளிலே எழுதப்பட்டுள்ள இந்தி எழுத்துக்களுக்கும் இதே நிலைதான்—அழிக்கப்பட்டு விடும் அவைகளும் தாரிலே,

ஏன் இந்தி எழுத்துக்களை அழித்திடும் இயக்கம்? எதனால் இந்தப் பணி புரிந்திடத் துணிந்திருக்கிறீர்கள்? என்று கேட்பதும் அதற்கு நாங்கள் விடையளிக்க வேண்டியதும் நியாயமே!

இந்தி எழுத்துக்களைத் தார்கொண்டு அழித்துவிட்டால் மட்டும் போதுமா? அதோடு அவைகள் ஒரேயடியாக அழிந்து ஒழிந்துவிடுமா என்றெல்லாங் கூடக் கேள்விகள் கிளம்பலாம்?

இந்தியை அழிப்பது என்பது இந்தியை ஒழித்துவிடுவது, அல்லது இந்தியை ஒரேயடியாக ஒழித்துக் கட்டவேண்டும் என்பதால் அல்ல, நாங்கள் இந்தி எழுத்துக்களை அழித்திடப் புறப்படுவது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தி எழுத்துக்களை அழிப்பது என்பது ஒரு அடையாளத்திற்காகத்தான்.

இரயில்வே நிலையங்களில் முதலிலும், ஆங்கிலமும், அதற்கும் கீழே தமிழும் உள்ளது, பெயர்ப் பலகைகளிலே!

இந்தி இந்த இராஜ்ஜிய மொழியல்ல. இந்தச் சென்னை மாகாண மக்களின் தாய் மொழியல்ல—பிரதேச மொழிகளில் எதுவுங்கூட அல்ல! வேறு மொழி—முற்றிலுமே வேருனமொழி—வடநாட்டு மொழி!

அந்த மொழிக்கு இங்கே—இத் திருநாட்டில் முதலிடம்! ஏன்?

தேவையற்ற மொழிக்கு, அன்னியமொழிக்கு முதலிடம், இங்கே ஏன்?

இல்லாத மொழி, இங்கே வழங்காத மொழி, இங்கே பேசப்படாத மொழி, இந்த நாட்டு மக்களின் மொழிக்கு மேலே, உயர்வைக் குறித்திடும் வகையில் முதலிடத்தில், மேலிடத்தில் எழுதப்பட்டிருப்பது இந்த நாட்டு மொழியை அலட்சியப்படுத்துகிறது.

இதனை மக்கள் விரும்பவில்லை, வெறுக்கிறார்கள். தங்களது வெறுப்பை, இந்திக்கு முதலிடம் கூடாது என்ற விருப்பத்தை ஏற்கனவே சர்க்காருக்குத் தெரிவித்தும், சர்க்கார் கேளாக் காதர்களாய்த் தங்கள் போக்கிலேயே, மக்களது மன நிலையை, வேண்டுமென்றே மதியாது இருக்கின்ற காரணத்தால் தங்களது அதிருப்தியை, தங்களது மொழியை மதியாது, மிதித்துத் துவைத்துக் கேவலப் படுத்தும் வழியில் வகையில், முறையில், மேலும் இந்தியை விட்டு வைத்திருப்பதைக் கண்டிக்கவேண்டிய கட்டத்திற்கு வெளிப்படையாகத் தெரிவித்தாக வேண்டிய நிர்ப்பந்த நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு விட்டனர்.

இந்த நிலையில், இந்திக்கு முதலிடங்கள் மொழிக்குக் கேவலம் என்று சாட

அடையாளமாக, ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று, இரயில்வேஸ்டேஷன்களிலுள்ளபெயர்ப்பலகைகளிலுள்ள இந்திப் பெயர்களைத் தார் கொண்டு அழித்து-மறைத்து மக்களது எண்ணத்தை—எண்ணத்தின் எதிரொலியை-எதிரொலியின் விளைவை—விளைவின் தன்மையைச் சர்க்காருக்கு எடுத்துக் காட்ட, முடிவு செய்துள்ளோம் என்பதேயன்றி வேறில்லை.

இது குற்றமா? கூடாதா? தவறு? நியாயமற்ற தன்மையா?

இந்திக்கு — இந்த நாட்டு மொழியல்லாத இந்தி மொழிக்கு ஏன் முதலிடம், இங்கே?

எப்படி எழுதலாம், முதலிடத்தில்—மேலிடத்தில், இந்தியை! எதேச்சாதிகாரப் போக்குதானே, இது?

ஏன் கண்டிக்கக் கூடாது, இதனை? இதிலே, என்ன குற்றத்தைக் காண முடியும், முடிகிறது, என்று கேட்கிறேன்.

எங்கள் மொழிக்கு — தாய் மொழிக்கு தமிழ் மொழிக்கு மூன்றாவது இடம், தகுமா?

மூன்றாவது இடம், கீழான இடம் எங்கள் வாழ்வு-வளம் என்ற நிலையிலே உள்ள தமிழுக்கு — தமிழ் மொழிக்கு!

நினைத்தாலே நெஞ்சு, குமுறுகிறதே! வெடிக்-
[illegible]யம் துடிக்கிறதே! எங்கள் மூச்சு அனல்
[illegible]ர் ஆகிவிடுகிறது, இந்தக் கொடுமையை
[illegible]டால்!

ஐயையோ, இந்தக் கேட்டினை பொறுத்திடுவது எப்படி, இன்னும்!

பொறுத்தது போதும், புறப்படு தோழா! அழித்திடு அதனை! அடாத செயலை விடாதே! என்று துடிக்கும் இளைஞர்கள் புறப்பட்டு விட்டனர், போர்க்கோலம் பூண்டு!

ஆளவந்தாருக்கும், இரயில்வே நிலையத்தாருக்கும் முன்னதாகவே தெரிவித்து விட்டுத்தான், புறப்படுகிறோம், நாம் செய்யப் போவதை!

திடீர், திடீரென்று தோன்றிச் செய்திடும் ஆகஸ்டுத் தனமல்ல, ஆர்ப்பாட்ட வெறியாட்டமுமல்ல, நாம் செய்யப் போவது!

திட்டமிட்டுத் தீர்மானித்த முடிவு இது! வெளிப் படையாகக் கூறிவிட்டு, வெட்ட வெளிகளிலே கூட்டங் கூட்டி மக்களிடமும் விளக்கிப் பேசி விட்டுத்தான் செய் கிறோம், நிறைவேற்றப் போகிறோம், புறப்படுகிறோம், களம் நோக்கி, மொழிப் போர்க்களத்தை நோக்கி!

இரவோடு இரவாகத் தண்டவாளத்தைத் பெயர்த்து, இரயிலைக் கவிழ்த்திடும் சதியல்ல, நாச வேலையல்ல, நாட்டின் அமைதியை குலைக்கச் செய்திடும் காட்டுக் கூச்சலுமல்ல, அமைதியான, முன்னறிவிப் புடன் கூடிய வேலைதான், நமது முறை.

போராட்டம் தொடங்கி விட்டோம் தோழர்களே, போராட்டம் தொடங்கி விட்டோம்!

மொழிப் போர் தொடங்கி விட்டது. [illegible]
காய் விட்டது. நெருங்கி விட்டது. போர்—[illegible]

இதிலே முன்னணி வீரர்கள் முதலில் பங்குகொள் கின்றனர்.

தார் சட்டியைக்கையிலேந்தி, மட்டையைத் தாரிலே தோய்த்து, இரயில்வே நிலையங்களிலுள்ள பெயர்ப் பலகைகளிலே யுள்ள இந்தி எழுத்துக்களை ஆகஸ்டு முதல் தேதியன்று அழிப்பது, அழித்து விடுவது என்ற உறுதியோடு முன்னணி வீரர்கள், முதல் படை வரிசை பவனி வரத் தொடங்கி விட்டது தோழர்களே, பவனி வரத் தொடங்கி விட்டது!

போர்க்களம் புகு முன், நாட்டு மக்களைக் கண்டு நாவெடுங்கும், படை வீரர்கள், தங்கள் வீர வணக்கத் தைப் பொது மக்களிடம் தெரிவித்துக் கொண்டு மக்களின் மலர்ந்த முகத்தைக் கண்டு களிப்பெய்தி விடை பெற்றுக் கொண்டு, களம் நோக்கி விரைந்த வண்ணம் இருக்கின்றனர்.

வீரர் வழி வந்த தமிழர், தமிழரின் தன்மானத் தைக் குலைத்திடும் இழிவைத் துடைத்திடப் போகிறார், கள் தாரிலல் இந்தி எழுத்துக்களை அழிப்பதன் மூலம்.

எங்கோ இருந்து வந்த இந்தியே, முகத்திலே தார் பூசிக்கொள், என்று கூறிக் கொண்டே தார் பூசப்படும் இந்தி எழுத்துக்களின் மீது ஆகஸ்டு முதல் தேதியன்று.

எங்கள் தமிழைத் தாழ்த்திய இந்தியே, தலை காட் டாது அழி, மறைந்து போ என்று வெற்றிப் பரணி பாடிக்கொண்டே, தார் பூசப்படும், ஆகஸ்டு மாதம் தியன்று.

மாக வந்து, ஆர்ப்பாட்டமாக அமர்ந்து இந்தியே, ஏமாளிகள் என்று எங்களை எண்ணை

வேண்டாம், பார், இதோ, உன் முகத்தை மறைத்துக் கொள், ஓடு, ஒளிந்து கொள் என்று கூறிக்கூறித் தார் பூசப்படும். ஆகஸ்டு முதல் நாளிலே, நாடெடங்கும், இந்தி எழுத்துக்களின் மேல், இரயில்வே நிலையங்களி லுள்ள பெயர்ப் பலகைகளில்.

கேவலம் செய்ய வந்த கெடுமதி கொண்ட மொழியே, ஒழி இங்கிருந்து, என்று பூரிப்போடு பூசப் படும் தார்.

எழுச்சி கொண்ட தமிழர் விழிப்புற்றுப் புறப்பட் டனர், இனியும் இங்கிருத்தல், ஆகாது, ஆணவக்கார இந்தியே, போ, போ, இங்கிருந்து என்ற முரசொலி முழங்கிடத்தான் போகிறது ஆகஸ்டு முதல் நாள், நாடெடங்கும் திருநாளாக.

முதல் வரிசை—முன்னணி வீரர்களைக் கொண்ட படை வரிசையைக் குலைத்துக் கலைத்திட, இடையிலேயே தடுத்து நிறுத்திட எத்தனை எத்தனையோ முறை களைக் கையாளலாம், ஆளவந்தார்கள்.

அடக்கு முறையை, அள்ளியள்ளி வீசலாம், ஆட்சி யின் பிடியினைக் கையிலே கொண்டுள்ள ஆச்சாரியார் அவர்கள்.

தடியடி தர்பார் நடக்கலாம், கூடும் மக்களைத் தடுத்துக் கலைத்திட!

இரயில்வே நிலையத்தின் வாயிலிலேயே தடுத்து நிறுத்தப்பட்டுச் சிறையிலே தள்ளப்படலாம், நாங்க

தடையுத்தரவு போடப்படலாம், பெயர்ப் களைச் சுற்றிப் பட்டாளத்தை வேண்டுமானா

வைத்தாலும் வைப்பார். அகிம்சையின் பிரதிநிதிகள் என்று தங்களைத் தாங்களே கூறிக்கொள்ளும் காங்கிரஸ் காரர், ஆளவந்தார்கள்.

என்னதான் கடக்கும்! என்னதான் கடக்காது என்று கூறவே முடியாது. இந்தக் கிளர்ச்சியின் வீண வால்!

எது வேண்டுமானாலும் கடக்கும், கடக்கலாம், கடக்கக்கூடும், ஆச்சாரியாரின் ஆட்சியிலே, இதன் வினைவால், நாமறியோம்.

நாம் எதற்கும் தயார்—எதையும் தாங்கும் இதய முடையவர்கள் நாம்! எதை வேண்டுமானாலும் செய் யட்டும், இந்த ஆளவந்தார்கள்.

அச்சமோ, ஆயாசமோ, இல்லை—இல்லவே இல்லை, நமக்கு, மொழிப் போரிலே குதித்திடும் காளையர்க்கு என் பதை அவர் நன்றாக உணரட்டும், உணரட்டும்.

நள்ளிரவிலே, நல்ல தூக்கத்திலிருந்து தட்டி யெழுப்பித் தடிகொண்டு தாக்கிப் பிடித்துக் கொண்டு போகப் படலாம், ஆகஸ்டு முதல் நாள் விடியுமுன்பே.

களம்புகும் காளையர்கள், நடுவீதியிலே திடீரென்று கைது செய்யப் படலாம். நாலுநாள் முன்னதாகக்கூட சிறைக்கிழுத்துச் செல்லப் பட்டால், ஆச்சரியமில்லை ஆச்சாரியாரின் ஆட்சியிலே!

குடியடி, துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப்புகைத் தாரவு எதையும் துணிந்து கையாண்டாலும்கூட இல்லை.

தனது மூழுச் சக்தியையும், பலத்தையும் திரட்டிக் கூட நம்மீது மோதவிட்டுப் பார்க்கக் கூடும் இந்தப் பாரத புத்திர இரத்தினங்கள் என்று பறைசாற்றிக் கொள்ளும், காங்கிரஸ் ஆட்சியினர்!

இந்தி எழுத்துக்களை அழித்திடும் கைகள் அடித்து ஒடிக்கப்பட்டு விழலாம், இரு துண்டுகளாக, கை யெலும்பு நொறுக்கப்பட்டுத் தூள் தூளாகும் வரையும் அடிக்கப்படலாம், தாக்கப் படலாம் தடிகளால்! ஏன் நடக்கக்கூடாது?

மண்டை பிளந்து, இரத்த வெள்ளத்திலே சிலர் கீழேவிழும் நிலைக்குத் தாக்கப்படலாம்.

மார்பிலே குண்டு பாய்ந்து குற்றுயிராய்த் துடித் துத் தவித்து மாளும் மனச் சங்கடமான நிலைமை வரும், வரக்கூடும் என்பதை எண்ணுமலில்லை.

நாங்கள் எதற்கும் அஞ்சோம், எங்கள் தமிழைக் காத்திட என்று சூளுரையுரைத்துக் குதித்து விட்டனர் காளையர், களத்தில்.

ஆகஸ்டு முதல் தேதியன்று மேற் கொள்ளப்படும் இக் கிளர்ச்சி அந்த ஒருநாள் மட்டுமேதான்.

அன்று, எங்களின் முடிவிற்குத் தடையாக, ஆட்சி யாளர் நின்று தடுத்தால், இக் கிளர்ச்சி மேலும் தொட ரும், தொடரும், தொடர்ந்து கொண்டே இருக்கும், இந்தி எழுத்துக்கள் அழிக்கப்படும்வரை என்பது மட் டும் நிச்சயம், மிகமிக நிச்சயம்.

அமைதியான முறையிலே சென்று, எ தொல்லையின்றி இந்தி எழுத்

எதிர்ப்பை, திருப்தியற்ற நிலையிலே, இடத்திலே, இந்தி எழுத்துக்கள் இருப்பதை எதிர்ப்பதைக் காட்டிடும் எதிர்ப்புணர்ச்சியின் அறிகுறியாக, எடுத்துக்காட்டாக, அழிக்கப் போகிறோம் நாங்கள்.

இது ஒரு அடையாளம்; எங்களது எதிர்ப்பை, ஆளவந்தாரும் மக்களும் தெரிந்துகொள்ள என்ற அளவிலே, இந்தக் கிளர்ச்சி—ஆகஸ்டுக் கிளர்ச்சி என்பதை மறுமுறையும் கூற விரும்புகிறேன்.

இதன் விளைவைப் பொறுத்துத் தான் மேற்கொண்டு எதையும் இதுபற்றி நாம் செய்ய இருக்கிறோம்.

இந்திக்கு முதலிடம்கூடாது, தமிழுக்கே முதலிடம் என்று கூறுகிறோம்.

இந்திக்கு முதலிடம் கூடாது என்பதுமட்டுமல்ல, இந்தி இந்த நாட்டிலே, தமிழகத்திலே, திராவிட நாட்டிலே ஆதிக்கம், எந்த உருவிலும் செலுத்தக்கூடாது, தகாது என்பதையும் கூறுகிறோம்.

இந்தி ஆதிக்கம்கூடாது என்பதும், கட்டாய இந்தி எதிர்ப்பும் நமக்குப் பழங்கதை-ஆட்சியாளருக்கும் இது பற்றிய அனுபவமும் உண்டு.

இந்தி முதன் முதலில் 1938-ம் ஆண்டில் ஆச்சாரியார் முதன் முதலாகக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பதவியேற்ற காலத்தில், கட்டாய பாடமாக நுழைக்கப்பட்டது பள்ளிகளில்!

டாய இந்தியைப் புகுத்தக் கூடாது. அது தமி
கேடு, தமிழரது வாழ்வுக்குங் கேடு என்று
தமிழர்கள்—திராவிடர்கள்.

ஆச்சாரியாரோ, "இந்தி இந்தியாவின் தேசிய மொழியாகப் போகிறது. எனவே தேசிய மொழியைக் கட்டாயம் படிக்கத்தான் வேண்டும்" என்று பிடிவாதம் செய்தார், அப்போது.

ஆச்சாரியாரின் அடாத செயல், தகாத வேலை, தமிழகத்திலே, கட்டாய இந்தி போதனையை ஏற்படுத்திய முறையற்ற முரட்டுச் செயல், தமிழரைத் தட்டியெழுப்பியது!

தமிழர்கள் விழித் தெழுந்தனர்! தமிழக மெங்கும் கட்டாய இந்தியை எதிர்த்துப் புறப்பட்டனர்!

மொழி வழியேவந்த, வந்துகொண்டிருந்த, ஏகாதிபத்தியத்தை, வடநாட்டு ஏகாதிபத்தியத்தை தடுத்திடத் துடித்தெழுந்தனர்.

நாடெங்கும் கண்டனம், ஆச்சாரியார் சென்ற இடமெல்லாம் கருப்புக் கொடிகள் காட்டப்பட்டன, இதன் விளைவால்.

ஆச்சாரியாரோ, அசைந்து கொடுக்கவில்லை. தலைவர் பெரியாரைப் பார்த்துக் கேலி மொழிகளை உதிர்த்தார், ஆச்சாரியார்.

"ஒரு சோட்டு ராமசாமி, இந்தி வேண்டாம் என்று கூறினால் விட்டுவிடுவேனே!" என்று அலட்சியப்படுத்தினர்.

"ஒரு சோட்டு ராமசாமி கேட்டால் விட்டுவிடுவேனே," என்று ஆர்ப்பரித்த ஆச்சாரியாரே அளவிற்குத் தமிழகம் கொதித் தெழுந்தது, இந்தியை எதிர்த்து.

தமிழ் காத்திடத் துணிந்து, கட்டாய இந்தியை எதிர்த்து அறப்போர் புரிந்து சிறை புகுந்தனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள்—தமிழ்த் தாய்மார்களும் இந்தப் பணியிலே பெரிதும் பங்கு கொண்டனர்.

இந்த இந்தி எதிர்ப்புப் போரிலே சிறையுண்டு, அல்லலுற்று அவதிப்பட்டு ஆதரவற்று இறந்தனர். இரு தமிழர்கள் - தமிழ்மொழியைக் காத்திடக் களம் புகுந்த காளையர் இருவர்—தாலமுத்து—நடராசன் என்போர் இறந்தனர்.

ஆம், கட்டாய இந்தி இரு இளந் தமிழரின் உயிரைக் குடித்தது. தன கோரப் பசியால்!

கொடுமை! கொடுமை! இருவர் இறந்தனர். இந்திப் போர்க்களம் புகுந்தவரில் இருவர் இறந்தனர்.

இதுமட்டுமா? தள்ளாத வயதடைந்த பெரியார் இராமசாமி சிறையிலே தள்ளப்பட்டார். வெயிலின் கொடுமையிலே, பெல்லாரி சிறையில் வாட விடப்பட்டார்.

அறிஞர் அண்ணா—மற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர் சிறைபுகுந்தனர், கட்டாய இந்தியை எதிர்த்து அறப்போர் நடத்தியதால்.

"கட்டாய இந்தி ஒழிக—தமிழ் வாழ்க" என்ற ஒலி அப்போது எங்கும் ஒலித்தது.

[illegible]ழநிடையே ஒரு புத்துணர்ச்சி பூத்துக் குலுங்
தமிழரெல்லாம் ஒன்று திரண்டு தமது
ன் னத்தைத் தெரிவித்தனர்.

இறுதியில் கட்டாய இந்தி ஒழிந்தது. கட்டாய இந்தி—கட்டாயமாக இந்தியைப் படித்தாக வேண்டும் என்ற சட்டம் எடுக்கப்பட்டுவிட்டது.

வெற்றி! முதல் மொழிப் போராட்டத்தில்! கட்டாய இந்தி எதிர்ப்புப் போரில்!

இந்தி மீண்டும் ஓமந்தூரார் ஆட்சியிலே நுழைக்கப்பட்டது, கட்டாயமாக.

மீண்டும் 1948 ல் அறப்போர் தொடங்கியது, அறிஞர் அண்ணாவைச் சர்வாதிகாரியாகக் கொண்டு.

இதிலும் பெரியார் முதல் பலர் கைது செய்யப் பட்டனர்.

சென்னையில், அறப்போர் வீரர்கள், மாடுபோல் லாரிகளில் அடைத்துச் செல்லப்பட்டுக் கண்ட கண்ட இடங்களிலே தனித் தனியாக விடப்பட்டனர்.

கர்ப்பிணி ஒருவரும் இதே நிலையில் கடத்தப்பட் டார். கொடுமை! கொடுமை!

குடந்தையிலே குருதி வெள்ளம் ஓடியது, இந்தப் போராட்டத்தின் காரணமாக, ஆட்சியாளரின், தடியடி தர்பார் தாண்டவமாடியதன் விளைவாக.

மீண்டும் வெற்றி—கட்டாய இந்தி எடுபட்டுவிட் டது. இந்தியை இஷ்ட இந்தியாக—வேறு வேறு போர் வைகளிலே மறைமுகமாகப் புகுத்திப் பார்க்கலாம் என்ற சுற்று வழி தேடிடும் சோக நிலைக்குச் சென்று விட்டனர், இந்திப் பக்தர்கள்!

மீண்டும் இந்தி தனது ஆதிக்கத்தை, மத்தி காரின் நிர்வாகத்திற்குட்பட்ட இரயில்வே களில் காட்டத்தொடங்கியது.

1950 ம் ஆண்டு கோவில்பட்டியில் நடந்த திருநெல்வேலி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டிலே, இதுபற்றித் தீர்மானம் செய்து, ஆளவந்தாருக்கு அனுப்பினோம்; எச்சரித்தோம்!

இயல்வே நிலையங்களின் பெயர்ப் பலகைகளில் முதலில் இந்தியும், அதன் கீழே ஆங்கிலமும், அதற்கும் கீழே கடைசியாகத் தமிழும் எழுதப்பட்டிருந்த இழி நிலை குறித்து, மத்திய சர்க்காருக்கும் மற்றவருக்கும் கண்டனம் தெரிவித்து இதனை உடனே மாற்றவேண்டும் என்று கேட்டோம்; எச்சரித்தோம் எதற்கும் அவர்கள் செவி சாய்க்கவில்லை!

இன்று தீர்மானித்தோம், ஆகஸ்டு முதல் நாளன்று இந்தி எழுத்துக்கள், மறையும், மறைக்கப்பட்டுவிடும் தார் மேலே பூசப்படுவதால்! இந்த நிலை, இப்போது?

இந்தியை தேசிய மொழியாக்கிடக் காங்கிரசார், இன்றைய தினம் ஆட்சிப் பீடத்திலே அமர்ந்திருப் போர் திட்டமிட்டு வேலை செய்கின்றனர்.

இந்தியை ஆங்கிலத்தில் நிலையிலே கொண்டுவந்து, அரசாங்க மொழியாக்க வேண்டுமென்பதே இத்திட்டத்தின் பொருள், நோக்கம் எல்லாம்!

இந்தி, அரசாங்க மொழியாகிவிட்டால், இந்தி படித்தோருக்கே, அரசாங்க உத்தியோகங்கள், இந்தி தெரிந்தோருக்கே அரசாங்கத்தில் சலுகைகள் வசதிகள் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுவிடும், தானுகவே.

நாட்டு மொழியான இந்தி, இந்தியத் துணைக்
ன் ஆட்சி மொழியாவதை நாம் தடுக்கவில்லை,
வ துரில்லை ஆனல்.....?

நாம் திராவிடர், நமது மொழிகள் திராவிட மொழிகள், சென்னை மாகாணமே திராவிட நாடு எனத் தனியாக, தனிச் சுதந்திர நாடாகப் பிரிந்து, பிரிக்கப்பட்டு வாழவேண்டும், விளங்கவேண்டும்.

அப்போதுதான், நமக்கு உண்மையான விடுதலை. வளர்ந்து போன வடநாட்டு வாணிபத்துடனும், முன்னேற்ற மடைந்துள்ள பொருளாதார நிலையுடனும் நாமும் போட்டியிட்டுச் சமமாக, வாழ முடியும்.

நமது நாடு-திராவிட நாடு வடநாட்டுக்கு, வருமான வரி, சுங்கவரி, புகையிலை வரி என்பனவற்றின் மூலம் வடநாட்டிற்கு வருடா வருடம் கொட்டியழும் கோடிக் கணக்கான பணமும் இங்கேயே தங்கி, இந்த நாட்டின் முன்னேற்றத்துக்கான வழிகளில் செலவிடவும் முடியும் என்று கூறுகிறோம்.

இந்த நிலையில் நமது மொழியைச் சிதைத்து, அவர்களது, வடநாட்டினரின் மொழியான இந்தியை எப்படியேனும் புகுத்தி நம்மை அடிமைகளாகவே, வடநாட்டுக்கு மார்க்கட்டாகவே திராவிட நாடு, இருக்கும்படி செய்யத் திட்டமிடுகின்றனர்.

இந்த அடிமை விலங்கினின்றும், விலகி தனி நாடாக, திருநாடாக-திராவிடக் கூட்டரசாகச் சென்னை வாழ, வழி, வகை வகுத்திடுவதே முக்கியபணி, வாழ்வின் இலட்சியம் என்பதை நாம் ஒரு சிறிதும் மறக்க முடியாது.

எந்த முறையில் பார்த்தாலும் இந்தியை எதிர்த்தோற்கடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மொழியாக, ஆதிக்கம் செலுத்திடும் மொழியாக இந்தி புகுத்தப்படுவதால்.

இந்தி வேண்டுமாஞல் நாமே, நமது விருப்பத்தின்படி, நமது தேவையை முன்னிட்டுக் கற்கலாம்.

தமிழே தெரியாத தமிழர்கள் நூற்றுக்கு எண்பது பேருக்கு மேலே உள்ளனரே! இந்த நிலையில் இந்திச் சுமை வேறு கட்டாயமாகத் தேவையில்லை யென்பதை மறுப்பவரெவர் நியாயத்தோடு.

வடநாட்டுடனும் சரி, வேறு எந்த அயல் நாட்டுடனும் சரி, அரசியல் உறவு—வாணிபம் போக்குவரத்து ஆகிய வற்றிற்கு உலகப் பொது மொழியாகிய ஆங்கிலத்தைக் கற்றுத் தெரிந்தால் போதுமே. இந்தி படித்தால், வடநாட்டுடன் மட்டுமே தொடர்பு கொள்ளும் வசதியையும் வாய்ப்பையுந்தானே அளிக்கும்.

இந்தி ஒழிக—கட்டாய இந்தி ஒழிக, ஆதிக்கம் செலுத்த நினைத்திடும் இந்தி ஒழிக, தமிழ் வாழ்க, தமிழ் வெல்க' என்று கூறி உங்களிடம் இந்தியை எதிர்த்துக் களம்புக, ஆகஸ்டு கிளர்ச்சியில் திருச்சியில் பங்கு கொள்ளச் செல்லுகிறேன்.

ஆகஸ்டு முதல் நாள் ஈரோட்டிலே அறிஞர் அண்ணு, ஆகஸ்டு கிளர்ச்சியில் பங்கு கொள்கிறார்.

திருச்சியிலே பெரியாரும் அதே இடத்தில் நானும் பங்கு கொள்ளுகிறோம்.

கடலூரிலே மதியழகன், சிங்காரச் சென்னையிலே
ாசன். மணிமொழியார், சத்தியவாணி முத்து,
குருசாமி ஆகியோர், கோவையிலே சம்பத்
மதுரையிலே நெடுஞ்செழியன்.

என்றபடி இன்னும் எல்லா இரயில்வே நிலையங்களிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களும், திராவிடர் கழகத்தின் முக்கியஸ்தர்களும் கலந்து கொள்கின்றனர்.

ஆகஸ்டு முதல் நாள், இன்பத் திராவிடத்தின் எழுச்சி முரசொலி திக்கெட்டும் முழங்கும், முழக்கப்படும்.

இந்தி எழுத்துக்களை அழித்திடப் புறப்படுபவர்களில் ஒருவனாகச் செல்லும் நான் உங்களிடம் விடை பெறுகிறேன்.

என்ன நடக்கப் போகிறதோ, ஏதும் தெரியாத நிலை, ஆளவந்தாரைப் பொறுத்த வரையிலே, இது பற்றி!

நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஆளவந்தானின் கொடிய அடக்குமுறைகட்கு ஆளாகி அண்ணை இறந்தால் கூட ஆச்சரியமில்லை.

நாட்டிலே பிணக் குவியல்கள், குவியல் குவியல்களாகக் குவிக்கப்படினும் வியப்பில்லை.

கொடுமை தலைவிரித்தாடலாம், அடக்கு முறை தாண்டவமாடலாம், குதிரைப் படை வீதிகளிலே வலம் வந்து தொண்டர்களைத் தமது குளம்புகளால் மிதித்துத் துவைத்து மக்களை ஓட, ஓட விரட்டியடிக்கலாம், முன்னர், ஆச்சாரியார், கவர்னர் ஜெனரலாகப் பவனி வந்த போது கருப்புக் கொடி காட்ட வந்த மக்களை மாக்களாகத் தாக்கித் துரத்தியடித்த முறையிலே!!

ஆள்பவர் ஆச்சாரியார், இங்கே! அவர் ஏற்கனவே ஒரு பெரிய, இந்தி எதிர்ப்புப் புயலை, போரை, தன்மையைக் கண்டவர்தான்.

அவரை யூகசாலி யென்றும், தந்திரசாலி யென்றும், குல்லுகபட்ட ரென்றும், சாணக்கிய தந்திரமிக்கவரென்றும், பலபடப் புகழ்கிறார்கள்.

ஒருவேளை, அடக்கு முறை கொண்டு தடுத்தால், தடியடி தர்பார்கள் நடத்திலல் இந்த இயக்கம் வலுக்கும், வளரும், பரவும் என்று எண்ணிச் சும்மா இருக்கலாம், கம்மை ஏமாற்றுவதாக எண்ணிக் கொண்டு.

எப்படி யிருந்தாலும், எல்லாம் ஒன்றே நமக்கு. அடக்கு முறை கையாளப்பட வேண்டும் என்று விரும்பி, வருந்தி, வேண்டி, அடிபட்டு, அதன் மூலம் தியாகியாகி, 'தியாகம் பாரீர்' என்று ஏலம் போட்டு மக்களிடம் ஓட்டுப் பிச்சைக் கேட்க நாம் செல்லவில்லை, களம் நோக்கி.

நாம் நமது இலட்சியத்தை யடைய, நமது மொழியைக் காத்திட, நமது மொழியின் மீது, நமது வாழ்வின் மீது ஆதிக்கம் செலுத்திடும் ஒரு மொழியை எதிர்க்கிறோம், என்பதை எடுத்துக் காட்டிடும் ஒரு அடையாளமாகத் தான் ஆகஸ்டுக் கிளர்ச்சியை, ஆகஸ்டு முதல் நாளென்று, இந்தி எழுத்துக்களை அழித்திடும் பணியை மேற்கொண் டிருக்கிறோமே தவிர வீண் வம்புக்கோ, தியாகிப் பட்டத்தைத் தேடியோ அல்ல, அல்ல என்பதைத்தான் கூறவேண்டி யிருக்கிறது.

எப்படியும் நடக்கட்டும் ஆச்சாரியார். அதைப் பற்றி அக்கரையின்றிக் களம் புகுந்து வெற்றியோடு வருகிறோம், வருகிறோம் என்று விடை பெறுகிறேன்.

பிரபிரசுத்ததாம்!

ஆகஸ்டுக் கிளர்ச்சி, ஆகஸ்டுமாதம் முதல்நாளன்று தமிழ் நாடெங்கும் கல்ல முறையிலே நடைபெற்றது!

போட்ட திட்டத்தை முழு அளவில், முழு வெற்றியுடன் நிறைவேற்றிடுமென்ற பூரிப்பு திராவிடர் இதயங்கள் அனைத்திலும் நிறைந்திருக்கின்றது.

ஆகஸ்டு முதல்நாளன்று, இரயில்வே நிலையங்களிலுள்ள பெயர்ப் பலகைகளிலுள்ள இந்தி எழுத்துக்களை அழித்து விட்டோம், அமைதியான முறையிலே.

ஆகஸ்டு முதல் நாளன்று இந்தி எழுத்துக்களை அழித்து எங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்ளப் போகிறோம் என்பதை எழுத்து மூலம் முன்னதாக எல்லோருக்கும் தெரிவித்து விட்டுத்தான் சென்றோம், இந்தியை அழிக்க, இந்தி எழுத்துக்களின்மீது தாரைப் பூசிட.

சென்றோம், அழித்தோம்—வெற்றி கண்டோம், திரும்பினோம். இதில் பூரிப்பு இருக்கிறது நமக்(கு)—திராவிடருக்கு.

எந்தக் காரணத்தாலோ, எந்த விதமான தா
போடாது, ஆளவந்தார் சக்தியற்றுக் கி
கம்மை ஏதும் செய்யாமல்.

ஆகஸ்டு முதல் நாளுக்கு முன் இரவுவரை இரயில்வே நிலையங்கள் எங்கும் பலத்த பாதுகாப்பு இருந்தது. என்னிரவு வரையுங்கூடப் பெயர்ப் பலகைகளைப் பாதுகாத்துவரத் தவரவில்லை, போலீஸார்.

ஆனல் திடீரென்று போலீஸ் தலையீடு, பாதுகாவல் யாவும் கைவிடப் பட்டன.

கழகம், குறிப்பிட்ட முன்னணி வீரர்களே வந்து இந்திப் பெயர்களை அழித்துவிட்டுப் போகட்டும், இடையிலே, எந்த ஆர்வம் அதிகமுள்ள தோழனும் முந்திக்கொண்டு, அழித்துவிடக் கூடாது என்று நள்ளிரவு வரை பாதுகாத்து வந்தனர் போலும், பரிதாபத்திற் குரிய போலீசார்.

எப்படியோ, போலீசார் தலையிடவில்லை. அமைதியாக நாம் நமது வேலையை, மேற்கொண்ட திட்டத்தை பணியை நிறைவேற்றினோம் முடித்து விட்டோம், வெற்றியோடு.

ஆனல் ஆளவந்தாரான, காங்கிரசைச் சார்ந்த, சேர்ந்த பத்திரிகைகள் அனைத்தும் ஆகஸ்டு கிளர்ச்சி பற்றிய சேதிகளைப் பிரசுரித்து விட்டு, அதே நேரத்தில் போலீசார் எவரையும் கைதுசெய்ய வில்லை, எந்தவித மான தலையீடும்இல்லை, அமைதியாகவே இந்திப் பெயர்கள் அழிக்கப் பட்டன, என்று செய்தியை வெளியிட்டு விட்டு அவற்றிற்கு "ஆகஸ்டுக் கிளர்ச்சி" பிசுபிசுத்து விட்டது, "ஒருவரும் கைதாகவில்லை" என்ற விதமான [illegible]ித் தலைப்புகளைத் தந்திருக்கின்றன.

[illegible]கஸ்டுக் கிளர்ச்சி தோல்வி யடைந்துவிட்டது [illegible]வு வியாக்கியானங்களுந் தந்திருக்கின்றன.

ஆகஸ்டு கிளர்ச்சி, அதற்கு முன்னமே, சில வாரங்கள் முன்னரே பேசியும், எழுதியும், அறிக்கைகள் விட்டும், ஆளவந்தாருக்கும் மற்றவருக்கும் தெரிவித்திருந்தும், அதனைப் பற்றிய விளக்கந் தராது, எதுவும் பேசாது வாய்மூடி மௌனிகளாக விளங்கிய தேசிய ஏடுகள் அனைத்தும் இப்போது கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு கேலியும் கிண்டலும் செய்கின்றன!

கேலிச் சித்திரங்கள் தீட்டிக் காட்டிப் பரிகசிக்கின்றன, ஆனந்தவிகடன் போன்றவை.

கரன்சி நோட்டுகளிலே கூட இந்தி எழுத்துக்கள் இருக்கின்றனவே, அவைகளை யழிக்க முடியுமா? அழிக்கும் தைரியம் வருமா என்ற துக்கடாத் தலைப்பின் கீழ் துடுக்குத் தனமாகக் கேட்கின்ற தேசியத் தாள்கள், தம்மை மறந்து, தமது முன்னுள் தேசியத் திருவினை யாடல்களை யெல்லாம் மறந்து.

நான் கேட்கிறேன், ஆகஸ்டு கிளர்ச்சியில் எங்களுக்கு என்ன தோல்வியைக் கண்டீர்கள்?

நாங்கள் சொன்னதை, இந்தி எழுத்துக்களை அழிக்கப் போவதாகக் குறிப்பிட்டதைச் செய்தோமே, இல்லையா? செய்தோமே முழு அளவில்! வெற்றியில்லை என்று கூறும் துணிவுள்ளவர்களை என்னவென்று நினைப்பது, அழைப்பது!

பாவம், தெரியாத்தனம் அல்ல. தங்கள் கண்களை மூடிக்கொண்டால் உலகமே இருண்டுவிடும் என நினைத்துக் கொண்ட குருட்டுப் பூனைகள் — கிழடு தட்டிப் போன பூனைகளுங்கூட என்றுதான் எண்ணத் தோன்றியிருக்கிறது.

அடக்கு முறைக்கு நாங்கள் ஆளாகவில்லை, ஆட்சியின் பிடியிலிருப்போர், எங்கள் உரிமையில் தலையிடத் தைரியமின்றி இருந்தனர் என்று கூறினால் எப்படி இருக்கும் அவர்களுக்கு. நாங்கள் சர்க்காருக்கு முன்னதாகவே அறிவித்துவிட்டு, சர்க்காரின் இருப்பிடத்தில் நுழைந்து, சர்க்காரின் சொத்தான, பெயர்ப் பலகையில் எழுதிய இந்தி எழுத்துக்களை அழித்துவிட்டு வந்ததைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்ததைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள், நினைக்க முடியும்? யோசித்துப் பாருங்கள்!

இந்தி எழுத்தை அழி—எடுத்து விடு என்றோம். கேட்கவில்லை. கேளாவிட்டால், நாங்களே அழிப்போம் —அழிப்பதன் மூலம் எங்களது எதிர்ப்பைக் காட்டுகிறோம் என்று எச்சரித்தோம். மீண்டும் எழுதினால் இதே நிலைதான் என்பது சொல்லாமலே எவருக்குந் தெரிந்த ஒரு சாதாரண உண்மை. இவ்வளவும் தெரிந்த ஆளவந்தார், ஏன் சும்மா யிருந்தனர்?

அடக்கு முறையைக் கையாண்டால், நாங்கள் வளர்ந்து விடுவோம், இயக்கம் வலுவடையும் என்று நினைத்து இதனைச் செய்திருந்தால், ஏமாந்தவர்கள் அவர்களே தவிர, நாங்களல்ல!

நாங்கள் எதையும், எந்தக் கொடுமையையும் வேண்டுமென்றே சென்று அணைத்துக் கொள்பவர்களல்ல. அன்பு முறையில், நியாய வழியில் நடப்பதையே விரும்புபவர்கள். என்பதால்.

ஆளவந்தார் எந்தவிதமான பதிலும் தெரிவிக்க எங்களுக்கு. அலட்சியம் செய்தனர் — மேலும்

எங்களின் இந்தி எழுத்தை அழிக்கும் இயக்கத்தில் எந்தவிதத் தயவீடுமின்றி ஒதுங்கி நின்றுவிட்டனர்?

இது எதைக் குறிக்கிறது? ஆளவந்தார் எங்களது எண்ணத்தை மறுக்கத் துணிந்திட முடியாத நிலையில் சிக்கித் தவிக்கின்றனர் என்பதைத் தானே எடுத்துக் காட்டுகிறது? வேறென்ன?

ஆகஸ்டு கிளர்ச்சி ஒரு அடையாளம் — ஒரு எடுத்காட்டு, எதிர்ப் புணர்ச்சியை வெளிப்படுத்த என்று நாம் கொண்ட அளவிற்குப் பெரிய வெற்றிதான். அதிலே நமக்குப் பூரிப்பும் பெருமையும் உண்டு.

பெருமை! பூரிப்பு! ஏன் இருக்காது, எங்களுக்கு!

ஆட்சியாளர்கள், பலப்பத்திரிக்கைகளின் பிரசார பலத்தைக் கொண்டவர்கள், போலீஸ், பொக்கிஷம், சட்டம், சட்டந்தரும் அதிகாரம் அத்தனையும் கொண்ட ஆட்சியாளர்கள், ஆகஸ்டுக் கிளர்ச்சியை அனுமதித்தனரே. எதுவுமே செய்யாமல், ஏன், ஒருவார்த்தை கூடச் சொல்லாமல்.

இதைக் கண்டு, உண்மையிலேயே, நாம், நமது உரிமையை, தமிழ் மொழியினைத் தாழ்த்திடும் போக்கைக் கண்டித்திடும் உரிமையை நிலை நாட்டிக் கொண்டவர்களாகிறோம் என்பது மட்டுமல்ல. நமது உரிமையை எடுத்துக் காட்டிடும் போக்கில் நீதியையும் நேர்மையையும், அதைவிட அமைதியையும் நிலை நாட்டியவர்களாகிறோம் என்பதை எண்ணி எண்ணிப் பெருமையும் பூரிப்பு மடையத்தான் செய்கிறோம்!

நாம் அடையும் இந்தப் பெருமையும் பூரிப்பும் ஆகஸ்டு கிளர்ச்சியைப் 'பிசு பிசுத்தது,' என்று

திடும் மனப் பண்பினருக்கு வேடிக்கையாக மட்டு மல்ல, வேதனையாகக்கூட இருந்திடும் என்பதிலே சந் தேகமில்லை!

வேடிக்கையும் வேதனையும், உரிமைக் குரல் கேட்டு உரிமைப்போரின் வெற்றிகண்டு, சொந்த நாட்டினரிடை யிலேயே, மிகவும் வேடிக்கையும் வேதனையுந்தரும் நிலை தான் நமக்குங் கூட, வேடிக்கை யாகவும் வேதனையாக வும் ஆகஸ்டு கிளர்ச்சியினைக் கொண்டிடும், கருதிடும் தமிழரை—திராவிடரைக் (வேறு முகாமிலுள்ளோர்,) காணும்போதும், நினைக்கும் போதும்!

இத்தகையினரும் நாட்டு நிலையை நன்கு கவ னித்து, விறுப்பு வெறுப்பற்றுச் சிந்தனை செய்து பார்த் தால், உள்ள நிலையைப் புரிந்து கொள்ளாமலிருக்க முடியாது! ஆனால் புரிந்து கொள்ளவோ அல்லது தெரிந்து கொள்ளவோ தேவையே இல்லை யென்று கருதிக் கொண்டு கண்மூடி நடப்பவரைக் காலம் மாற் றும் என்று எண்ணி, விட்டு, நமது வேலையைத் தொடர்ந்து செய்ய வேண்டியவர்களாகிறோம், நாம்.

கரன்சி நோட்டுகளிலே இந்தி எழுத்துக்கள் இருக் கின்றனவே, அதை ஏன் அழிக்கவில்லை, ஒழிக்கவில்லை என்று கேலி செய்திடுவோர் சிறிது, தங்களது முன் னுள் வாழ்வை அரசியல் வாழ்வைக் கவனித்துப் பார்த் தால், இந்தக் கேள்விகளைக் கேட்கவே மாட்டார்கள்!

கண் மூடிக்கொண்டு, எதையாவது கேட்கவேண் டும், கேலி செய்திடவேண்டும் என்ற ஒரே எண்ணத் [illegible] எழுச்சியால் எழும்பிடும் திடீர்க் கேள்விகள் [illegible] இவை யெல்லாம்!

அன்று, வெள்ளையரை விரட்டவேண்டும், இந்திய நாட்டைவிட்டு என்ற எழுச்சி பெற்ற காலத்தில், காங்கிரசார், வெள்ளையருக்குத் தங்களது எதிர்ப்புணர்ச்சியைப் பலப்பல வகைகளிலே காட்டினர்.

சீமைத்துணி மறியல்—அந்நியத் துணிகளை அணியக் கூடாது, வாங்கவே கூடாது என்ற பிரசாரம்—பகிஷ்காரம் முதலியன நடந்தன.

அந்நியத் துணிகளை வாங்குவதால், இந்தியப் பணம், அந்நியனுக்கு, வெள்ளையனுக்குச் செல்லுகிறது என்ற எண்ணத்தைக் காட்டிட மக்களுக்கும் உணர்த்திட அந்நியத் துணிகளை விற்ற கடைகளின் முன் மறியல் செய்தனர். அதுமட்டுமல்ல, அந்நியத் துணிகளை, மக்கள் முன்னர் தீயிட்டுக் கொளுத்தினர்—பொசுக்கினர், எதிர்ப் புணர்ச்சியை எடுத்துக் காட்டிட, மக்களின் மனதில் பதிய வைத்திட,

இதெல்லாம் சரி என்று கையாண்டனர். அந்நியப் பொருள் கூடாது, அதன் மூலம் அந்நியனுக்கு இந்தியப் பணம் போகக்கூடாது என்பதற்காக அந்நியப் பொருள்கள் எல்லாவற்றையும் ஏன் கொளுத்தவில்லை, என்று கேட்டால், எப்படியிருக்கும், அவர்களுக்கு?

எதிர்ப் புணர்ச்சியைக் காட்டிட ஒரு அடையாளமாகத் துணிகளைக் கொளுத்தினர் என்பதுதானே முக்கியம், அதைவிட்டு, மோட்டார், வேண்டாம்-கொளுத்து; இரயில் கூடாது—உடைத்தெறி என்பன போன்ற எல்லாவற்றையும், எல்லா அந்நியப் பொருள்களையும் ஏன் கொளுத்தவில்லை, கொளுத்திக் காட்டவில்லை என்ற கேள்வி எவ்வளவு படிக்கையோ, எ

விசித்திரமோ, அவ்வளவு வேடிக்கையும், விசித்திரமு மானது தானே, இன்றைய காங்கிரசார், கரன்சி நோட்டு களில் உள்ள எழுத்துக்களை இந்தி எழுத்துக்களை ஏன் அழிக்கவில்லை, ஒழிக்கவில்லை, எரிக்கவில்லை, என்று கேட்பது? சிந்தித்துப் பார்க்கவேண்டாமா, இதை யெல்லாம்?

ஒரே காரியத்தை அவர்கள் செய்தால் சரி, மற்ற வர் செய்தால் சரியல்ல என்ற கொள்கை கொண்டோர் 'பிசு பிசுத்ததாம்' என்று பேசிடுவது கண்டு கவலைப் படத் தேவையில்லை என்று கூறுவதைத் தவிர வேறென்ன கூறுவது என்று கேட்கிறேன்.

நான்சென்ஸ்.....!

நாட்டைப் பிளந்திடும் வான்!

ஆகஸ்டு கிளர்ச்சி நடந்து, அதிலே நாம் வெற்றி கண்டு, விழாக்கள் பல கொண்டாடிடும் நேரத்திலே இங்குள்ள தேசியத்தாள்கள் பிசுபிசுத்து விட்ட தென்று வேடிக்கையும், கிண்டலும் கேலியும் புரிந்தன, நிலைமை தெரியாத, தெரிந்து கொள்ளவேண்டாம் என்ற கண்மூடிக் கொள்கையால்,

ஆகஸ்டு கிளர்ச்சி பற்றிய நிலைக்கு, முடிவிற்கு நாம் வருவதற்கு இரண்டு ஆண்டுகட்கு முன்பே, கோவில் பட்டித் தீர்மானம் மூலம், இது பற்றிய வேண்டு கோளும், அதைத் தொடர்ந்து எச்சரிக்கையும் விடுத் தோம் நாம், மத்திய சர்க்காருக்கும் மற்றவருக்கும் அப்போதெல்லாம் அவர்கள் ஏதும் பேசவில்லை, அலட் சியப்படுத்தினர்.

நேரடியாகச் சென்று, முன்னறிவிப்பும் கொடுத்து விட்டே, இந்தி எழுத்துக்களை யழித்துத் திரும்பினோம், வெற்றி வீரர்களாக!

அப்போது நமது செயலில் குறுக்கிட்டுத் தடுத்தி டவோ, அன்றித் தகாத வேலையென்று மறுத்துக் கூறி டவோ எவரும் துணியவில்லை, மத்திய சர்க்காரிலிருந்து.

ஆனால் அண்ணமலையிலே, சென்னையின் வரண்ட பஞ் சப் பிரதேசங்களைப் பார்த்துத் திரும்பிச் சென்ற மத்

சர்க்காரின் பிரதமர் பண்டித நேரு, அவர்கள் சென்னையில் பேசிய ஒரு கூட்டத்திலே, இந்தி எழுத்துக்கள் அழிக்கப்பட்டதைக் குறித்துத் தமது திருவாயைத் திறந்து கொட்டிவிட்டுச் சென்றார்?

காங்கிரசிலே, நேர்மையானவர், கண்டிப்பானவர், கண்ணியம் பொருந்தியவர், கட்டுக்கடங்கிய கொள்கையைக் கொண்டவர், சிந்தித்துத்தான் எதையும் செய்திடும், பேசிடும் பண்பு படைத்தவர் என்றெல்லாம் பேசப்பட்டு வந்த பண்டித நேரு அவர்கள் ஆகஸ்டு இளர்ச்சியைப் பற்றி மிகவும் பொறுப்பற்ற முறையிலே பொறுப்பற்ற வார்த்தைகளை உதாரித்தனமாகச் செலவிட்டுச் சென்றிருக்கிறார்.

பொறுப்புள்ள பிரதமர் நேரு, ஒரு குறிப்பிட்ட இயக்கத்தினர், முறையோடு, ஓழுங்கோடு, முன்னறிவிப்பும் கொடுத்துவிட்டுச் செய்த ஒரு இளர்ச்சிக்குக் காலத்தில் பதில் அளிக்காது இருந்துவிட்டார். அது மட்டுமல்ல, நேரடியாக, அவரது அலட்சியத்திற்குப் பதில் நடவடிக்கையெடுத்தபோது வேடிக்கையென்று நினைத்தோ வேறு என்ன காரணத்தினாலோ சும்மா இடந்தார், செயலற்று, செயலாற்றாது.

இவ்வளவும் முடிந்து இரு மாதங்களுக்குப் பின்னர், எங்கோ எதற்கோ வந்த பிரதமர் நேரு, போகிற போக்கில். உடனே விமானம் ஏறிப் போய்விடப் போகிறேமே என்று, இங்கிருந்து புறப்படும் நிலையில் நடந்த கூட்டத்தில், இந்தி எழுத்தை யழித்த செயல் "சிறு பிள்ளைத் தனமான சிறுமதி" என்று கூறிவிட்டுச் [illegible]றார்! தகுமா? சரியா?

சிறுபிள்ளைத் தனம்—சிறுமதியின் விளைவு! வேடிக்கையான, விளையாட்டு மொழிகள்தான். ஆனால் எவ்வளவு வேதனை தரும் வார்த்தைகள், அவைகள் உபயோகிக்கப்பட்ட காரணத்தை நோக்கும்போது, சிந்தியுங்கள்.

ஆகஸ்டு கிளர்ச்சி நடந்தபோது, வாய்திறவாத நேரு, சென்னையிலே சுற்றிவந்தபோது சொல்லாத நேரு, திரும்பிப் போகிற போக்கில் அவர் கூறிய படியே சிறுபிள்ளைத் தனமாகவும் சிறுமதியுடனும், பேசிவிட்டுச் செல்லலாமா?

அவர் மீண்டும் வரும்போது, இப்படிக் கூறிவிட்டுச் சென்றதின் விளைவை, மக்களின் மன நிலையை நன்கு, நல்ல முறையில், அவர்போன்றல்ல, முறையோடு காட்டிடத் திராவிடர் தவறிட மாட்டார்கள் பது உறுதி—மிக மிக உறுதி.

ஒருவகையில் 'நான்சென்ஸ்' சிறுமதி யென்று என்று கூறிய நேருவுக்கு வந்தனம் செலுத்துகிறேன். என் வகையில்!

நேருவே, இன்னும் ஏதாவது கூறுங்கள், கடுமை யாக, கொடுமையாக, வாய் கூசும் முறையில் உம்மால் முடிந்தால் என்றுதான் கேட்கிறேன்.

சொரணை கெட்டவர்களே, சோம்பேறிகளே, மூட்டாள்களே, ஏமாந்த சோணகிரிகளே, என்றுகூட அழையுங்கள்.

மொழி என்பது உங்களுக்கு ஒரு கேடா? அதற்காகப் போராட்டமா? நடக்காதப்பா, நடக்காது. நாதி

யற்றவர்களே, பார்த்துப் பிழையுங்கள். அரை வயிற்றுக் கஞ்சிகூட இல்லாது போய்விடும் என்று கூடச் சொல்லுங்கள்.

இவை யெல்லாம், நான்சென்ஸ் என்று கூறிடுவது எல்லாம், எங்களது உணர்ச்சி வெள்ளத்தை தட்டி யெழுப்பித் துள்ளியெழச் செய்து, திராவிட நாட்டை சீக்கிரம் துண்டாடிடும் துணிவை, தீர்மானத்தை, எண்ணத்தை, எழுச்சியை, வீரத்தை, வீராவேசத்தைத்தான் ஊட்டிடுமே தவிர, கோழைகள் ஆக்காது, ஆக்காது என்பதைக் கூவிக் கூவிக் கொக்கரித்துக் கூறுகிறேன்.

நேருவே, பண்டித நேருவே, பண்பட்ட மனிதன், மனிதருள் மாணிக்கம், அகிம்சா மூர்த்தி, உலக உத்தமர் காந்தியாரின் வாரிசு என்றெல்லாம் புகழ்பட்டும் பறை சாற்றப்பட்ட நேருவே கூறிய, கூறிச் சென்ற 'நான்சென்ஸ்' என்ற மொழி, பிரதமர் நேருவின் மொழி, வடநாட்டையும் திராவிட நாட்டையும் வேறு வேறுகப் பிரித்திடும் உணர்ச்சியை மேலும் மேலும் ஊட்டி யூட்டி எம்மை, திராவிடரை உந்தி யுந்தித் தள்ளித் தட்டி யெழுப்பிவிடுமே தவிர எம்மைத் தடுத்திடச் சிறிதளவும் பயன் படாது என்பதை நன்றுக உணரட்டும், நேரு அவர்கள்.

நீங்கள் எங்களை இவ்விதம் காக்கிலே கரம்பின்றித் திட்டுடிம் வேகத்தில் திராவிடம் எங்களை அணைத்துக் கொள்ள நெருங்கி வருகிறது என்றே அர்த்தம் என்பதைக் கூறுகிறேன்.

'நான்சன்ஸ்' என்று எந்த அறிவு, ஆராய்ச்சி, பண்பாடு தெரிந்து குறிப்பிட்டாரோ, அந்த அலகாபாத் புண்ணியவான்?

என் அவருக்கு அவ்வளவு எரிச்சல்?

படித்த மேதாவி, பிரதமர் பதவி, பலரும் மெச்சிடும் பகட்டு வாழ்வு என்ற எண்ணமா? யோசிக்கவேண்டும் திராவிடர்கள்.

நம்மைத் துச்சமெனக் கருதி நமது மொழிப் போராட்டத்தை, நமது உயிரை, உயிருக்குயிரான தமிழை யன்றே, தமிழரது, வாழ்வை யன்றே, நான் சென்ஸ் என்று கூறுவதாக அர்த்தம், கூறுகிறார்.

சிறுமதி சிறுபிள்ளைத்தனமான சிறுமதி (Childish Non-sence.)

பிறமொழி, தமது மொழியை யழித்திடும் வகையில் ஆதிக்கம் செலுத்துவை எடுத்துக் காட்டிடும் ஆகஸ்டுக் கிளர்ச்சியை, அடையாளக் கிளர்ச்சியைத் தான் சிறுமதி! சிறு பிளைத்தனம் என்று அலகாபாத் பண்டிதர் கூறிவிட்டார், ஆத்திரத்தில்.

நான்சென்ஸ்! நாட்டைத் துண்டாடிடும் வான் நான்சென்ஸ் என்ற சொல், எங்களுக்கு!

சோம்பிக் கிடக்கும் திராவிடரைத் துடித்தெழச் செய்து, உரிமைக் குரலை உயர்த்தி, நாட்டை, இந்திய உடகண்டத்தை, வடநாடு—தென்னாடு (திராவிடநாடு) என்று இரு கூருகப் பிளந்திடும் வாள், அந்த வாய் வார்த்தை, நான்சென்ஸ் என்ற வார்த்தை!

பண்டிதர் தம்மை மறந்து, திடீரென்று கொட்டிச் சென்ற கொடுமொழிகளை மனதார, மன்னிப்புக் கோரி, திரும்பப் பெற்றுக்கொண்டாக வேண்டும்.

துடுக்குத் தனமாகக் கூறிச் சென்ற வார்த்தைகளை வாபஸ் பெற வேண்டும், காங்கிரசாரின் பாணியிலே கூறவேண்டுமானால்.

திராவிடரின் பண்பிற் கிணங்க தமது தவறை உணர்ந்து, வருந்தி. தம்மைத் திருத்திக்கொள்ள முயல வேண்டும் என்று அவருக்குக் கூறுகிறேன் நான்.

மேரு. இந்தியாவின் மேரு (இமயமலை) என விளங்குவதால். அவ்வளவு பெரிய மனிதர். இவ்வளவு சுலபத்தில் மன்னிப்புக் கோருவாரா?

எது எது எப்படியாகிலும் நடக்கட்டும். நாம் நமது இனமொழியைப் பிறமொழி ஆதிக்கம் செலுத்திட அனுமதியோம் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

நமது வாழ்வும் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு என்ற புரட்சிக் கவியின் இதய கீதம். வான்முட்ட, வளமார் திராவிடம் வாழ்க வாழ்க பேரொலி டில்லியைக் கிடுகிடுக்க வைக்க. திராவிடநாடு திராவிடருக்காக ஆக்கப்பட அடுத்துத் தொடுத்திடும் உரிமைப் போராட்டத்தின் அஞ்சாத அணி வகுப்பிலே கலந்து கொண்டாடடத் தயாராகுங்கள், தோழர்களே, தயாராகுங்கள்.

இரத்தச்சுவடு

போராட்டம், திராவிட நாடு திராவிடருக்கே என்ற உரிமைப் போராட்டத்தில் கலந்திட வாரீர் திராவிடரே என்று அழைத்திடுகிறேன்.

பிசுபிசுத்தது என்று ஆகஸ்டுக் கிளர்ச்சியைக் கேலி செய்திட்டனர், காங்கிரசாரும், தேசிய ஏடுகளும்.

கரன்சி நோட்டுகளைக் கொளுத்தக் கூடாதா, இந்தியை ஒழிக்க, என்று கேலி பேசினர்?

நேரு வந்தார், 'நான்சென்ஸ்' என்று கூறிச் சென்றார்.

இதை யெல்லாம், வேடிக்கையாக, கேளிக்கையாகக் கேலிக் கூத்தாக, வினையாட்டாகக் கூறிவிட்டுச் சென்றனர், செல்கின்றனர்.

இவை யெல்லாம் திராவிடனின் இதயத்திலே பாய்ச்சப்படும் சூட்டுகள்.

பழுக்கப் பழுக்கக் காய்ச்சப் பட்டு நெஞ்சிலே நுழைக்கப்படும் கொடுவாட்கள் இவை!

விலாவிலே வேல்கொண்டு குத்திடும் விபரீத மொழிகள்.

திராவிடனின் வேதனையைக் குத்திக் கிளறி, கொடுமைப் படுத்திடும் கொடுமையான செயல், படுமோசமான பாதகச் செயல்.

வாழ்ந்த இனம், வரலாற்றிலே வகையானதொரு இடத்தைப் பெற்றிருந்த இனம், சூது, வாது, வஞ்சனை, சதி என்பன போன்ற சந்தர்ப்பக் கோளாறுகளால் நிலை தவறி, நெஞ்சங் குமுறி, தன்னிலை யுணர்ந்து, மீண்டும் புது வாழ்வுபெறத் துடித்திடும் நேரத்தில் இவைகள், இக் கேலி மொழிகள், கிண்டல் விளுக்கள், துடுக்குத் தனமான வார்த்தைகள், அலட்சிய சுபாவம், அகம்பாவ மொழிகள், ஆணவப் போக்கு யாவும் வீழ்ந்த இனத்தின், வீறு கொண்ட மக்களுக்கு, எழுச்சி பெற்ற இளைஞர் உள்ளங்களுக்கு எவ்வளவு துயர்தரும், துன்பத்தைக் கிளறும், மனதைப் பதைபதைக்கச் செய்திடும் என்பதைச் சற்றுவது எண்ணிப் பார்த்திட வேண்டாமா?

தட்டிக் கேட்டிட ஆளில்லை என்று நினைத்து விட்டனர், ஆளவந்தாரும். அவர் வழி நிற்போரும்?

ஆட்சியும், ஆட்சியிலுல் கிடைத்திடும் அதிகாரமும் எத்தனை நாளைக்கு?

ஆட்சியின் உச்சியிலே வீற்றிருந்து ஓய்யாரமாக வாழ்ந்திடும் நிலைமை அவர்களுக்கே சொந்தமா என்ன?

உலக வரலாற்றைப் புரட்டிப் பார்! பார், பார்! புரியும். ஆட்சியும் அதிகாரமும் என்றும் ஒருவரிடமே, என் குறிப்பிட்ட கூட்டத்துவரிடமேகூட நிலைத்திருக்க வில்லை என்ற உண்மையை உணர்ந்திடலாம்.

விடுதலை உணர்ச்சி பெற்ற மக்களை அடக்கி ஆண்டு வந்த ஆளவக்காரர்களின் நிலை குலைந்துபோன நிகழ்ச்சிகளை நிச்சயம் காணமுடியும்.

தன்னை உணர்ந்து, தனது இனத்தை, இனத்தின் மேன்மையை, பண்பாட்டை, இன மொழியை, இன மொழியின் தொன்மையை, மேன்மையை உணர்ந்து தன்மானத்துடன், தன்னத்தானே ஆண்டு கொண்டிட விரும்பிடும் எந்த இனத்தையும் அடக்கி ஒடுக்கி ஆண்டிட முனைவது அடாத செயல், அடாத செயல்மட்டுமல்ல, அறிவீனம். அநாகரிகமான தங்கூட, இன்றைய உலகில்.

இதனை, நம்மை, திராவிடரை, திராவிட இனத்தை, அடக்கி, ஒடுக்கி ஆண்டிட நினைத்திடுவோர், நன்றாக, மிகமிக நன்றாக நினைவில் நிறுத்த வேண்டுகிறேன்.

"திராவிட நாடு திராவிடருக்கே" என்று திராவிடன் முழக்கமிடுகிறான்.

திராவிட நாட்டைத் தனி நாடாக்கி, இந்திய உபகண்டத்தின் ஏகோபித்த, ஒரே ஆட்சியின் பிடியிலிருந்து, பிணைப்பிலிருந்து, பிரித்து, நீக்கி, தனி யரசு, தன்னரசு செலுத்திடத் திராவிடன் துடிக்கிறான், துடி துடிக்கிறான்.

"திராவிட நாடு திராவிடருக்கே" என்ற முரசொலி திக்கெட்டும் ஒலிக்கிறது, திராவிடத்தில்.

திராவிடத்தின் இன உணர்ச்சியையும் எழுச்சியையும் இன முழக்கத்தையுங் கண்டு, கேலி, கிண்டல் செய்து பார்க்கின்றனர், மற்றவர்—மாற்றார்.

மொழி வழி இனத்தின் மேன்மையையும், பண்பையும், பகுத்தறிவையும் பாழ்படுத்திடப் பல வழிகளிலும் முயன்றனர்—மேலும் மேலும் பலப்பல உருவங்களிலே முயன்றுகொண்டே யிருக்கின்றனர்.

ஆம். இந்தி—இந்தி மொழி இந்திய உபகண்டத்தின் ஆட்சி மொழியாக, அரசாங்க மொழியாக இந்திய மக்களை ஆளும்-ஆண்டிடும் மொழியாகப் படிப்படியாக ஆக்கப்படும் என்று அறிவித்தனர். அதற்கான வழி வகைகளை யெல்லாம் படிப்படியாகச் செய்துகொண்டே வருகின்றனர்.

எந்த இனத்தையாவது அழிக்க வேண்டுமா? சிதைத்தொழிக்க வேண்டுமா? அதன் பழக்க வழக்கங்களைப் பாழ்படுத்தி உருமாற்றிட வேண்டுமா, இனம் என்று ஒன்று இருந்தகவடே, அடையாளமே தெரியாது உருக்குலைத்திட வேண்டுமா, நாகரிகம், பண்பு, கலை, கலாச்சாரம், யாவற்றையுமே, வேறு விதங்களிலே கலக்கச்செய்து மாற்றிட, முழுவதையுமே இனந் தெரியாது மாற்றிட வேண்டுமா?

முதலில் அந்த இனத்தின் மொழியை ஒழி, அடிமைப்படுத்து, மொழியுடன் உனது மொழியை மோது ஆதிக்கம் செலுத்திடு—உனது மொழியை, ஆதிக்கம் செலுத்திட விரும்பிடும் உனது மொழியை அந்த இனத்தின்மேல் சுமத்து, படிப்படியாக இனமொழி சிதையும் அழியும், உருவந் தெரியாது குலையும்.

மொழி, அந்த இனத்தின் மொழி, சிதையச்சிதைய அதன் பண்பும், பழக்கமும் பாழாகிச் சிதைந்து கொண்டே போகும்.

அந்த மொழி அழிய அழிய அதனது இனமும் இன உணர்வும் தன்னாலே அழியும், அழியும் அழிந்து கொண்டே போகும்.

மொழி உருக்குலையக் குலைய, இனத்தின உருவும், உருவுக்கான பண்பு, கலை, நாகரிகம், யாவும் சிதைந்திடும் படிப்படியாக!

இடையே, ஆதிக்க மொழியின் பண்பும், பழக்கமும் வழக்கமும், அந்த மொழி, ஆதிக்க மொழி ஊட்டிடும், உணர்வும், உணர்ச்சியும் அந்த இனத்தையே அடிமை கொண்டிடும், அடங்கி ஒடுங்கி வாழ்ந்திடச் செய்திடும், தன்னுலேயே!

இது உலகறிந்த உண்மை. பலப்பல, ஆதிக்கக் காரர்கள் அனைவரும், கடைப் பிடித்து, முன்னேறி, பிற இனங்களை அடக்கியாளக் கையாண்ட முறையுமாகும்.

இந்த வகையிலேதான், இந்தி, இந்திய உபகண்டத்தின் ஆட்சி மொழியாக, இந்திய மக்களை ஆண்டிடும் மொழியாக, ஆதிக்க மொழியாகத் திராவிடரின் மீது சுமத்தப்படுகிறது, நுழைக்கப் படுகிறது, படிப்படியாக.

படிப்படியாகப் பாய்ந்து, நுழைந்து பரவி வரும் படையெடுப்பை, மொழி ஆதிக்கத்தைத் தெரிந்து, புரிந்து, ஆரம்பத்திலேயே அணைபோட்டுத் தடுத்து நிறுத்திட வேண்டாமா?

தமிழன்—திராவிடன் திராவிடனுகவே, திராவிட இனத்தின் நல்ல நல்ல பண்புகளைப் படைத்தவனுகவே தன்மான மிக்க திராவிடனுகவே, தீரத் திராவிடனுகவே வாழவேண்டுமானுல் மொழிவழி வந்து புகுந்திடும் மாற்றுக் கலாச்சாரத்தைத் தடுத்துத்தானே தீரவேண்டும்?

இதைத்தான் நாம் உணர்ந்து மொழிப் போராட்டம் தொடங்கினேம் என்பதை மீண்டும் நாட்டு மக்க

ளின் நினைவிற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக் கிறேன்!

நாட்டு விடுதலை பெறத்துடித்தோம். வெள்ளையனே விரட்டிடுமும்—என், விரட்டுவதற்குள் அவனுகவே, விவேகத்துடன், வியாபாரத் தொடர்பை மட்டும் விடாது வெளியேறி விட்டான், தானுகவே,

உலகச் சூழ்நிலையின் சூட்சுமத்தைப் புரிந்து கொண்ட யூகசாலியான ஏகாதிபத்தியத்துடன், ஆங்கி லேய ஏகாதிபத்தியத்துடன் உறவாடிடும் வடநாட்டு ஏகாதிபத்தியம் — வளர்ந்து ஓங்கியுள்ள வாணிபம், தென்னுட்டை—திராவிடநாட்டைத் தனக்கு மார்க்கட் டாக, தனது உற்பத்திப்பொருள்களை விற்றிடும் சந்தைக் கூட மாக்கிக்கொண்டு உல்லாச வாழ்வு வாழ்கிறதே!

உல்லாச வாழ்வு அங்கே! ஓயாது ஒழியாது தொழில் வளம் பெருகி, அதன்மூலம் வாணிபம் வளர்ந்து-பொரு ளாதாரத் துறையில் பெரிதும் முன்னேறியுள்ள வட நாட்டின் எடுபிடியாக, ஏவலனுகவே திராவிட நாடு விளங்கி வருகிறது இன்றைய அரசியல் அமைப்பில், ஒரே இந்தியா என்ற பிணைப்பில் இருந்து வருவதன் காரணமாக என்பதையும் மக்கள் நன்கு, நானுக்கு நாள் உணர்ந்து வருகிறார்கள் இங்கே, என்பதைக் காண ஓரளவு மகிழ்ச்சி பொங்கிடத்தான் செய்கிறது என் போன்றூருக்கு!

மகிழ்ச்சி! உணர்ச்சி! இன உணர்ச்சி, நாட் டுணர்ச்சி, தன்மான உணர்ச்சி, தனது மொழியுணர்ச்சி ஆகியவைகளை, மக்கள் உணர்ந்திடுவதைக் காணுவ திலே கிடைத்திடும் மகிழ்ச்சி மங்காது மறுமலர்ச்சி

யடைந்து, நாட்டு நன்மைக்குப் பயன் தரும் வழியில் வளரவேண்டும், என்பதுதான் நமது குறிக்கோள்.

தமிழகத்தின்—திராவிட நாட்டின் செல்வம் சீரழிந்து, திராவிடருக்கே முழுதும் பயன் படவில்லை, நமது செல்வம், வடநாட்டிற்குச் சுங்கவரி, வருமான வரி, முதலியவற்றின் மூலம் செல்வதால் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன் என்பதை மறுமுறையும் எண்ணிப் பார்த்து, இதைத் தடுத்திட மார்க்கமென்ன? வழி யென்ன? வகையென்ன? என்று சிந்தனை செய்திட வேண்டிக் கொள்கிறேன்!

அதிகாரம் அங்கே, டில்லியில்! ஆட்சியின் உச்ச நிலை வடநாட்டிலேதான்! வாணிபம் வளர்ந்துள்ளதும் அங்கேதான்—வடநாட்டிலேதான்!

இந்த நிலையுடன், அந்த மொழி—இந்தி மொழி—வடநாட்டு இந்தி மொழியே — ஆளும் மொழியாகவும் ஆகப்போகிறது என்ற நிலை! ஆபத்தான நிலை!

ஆளும் மொழியும், அதிகார பலமும், பொருளாதாரத்திலே வளர்ந்துள்ள செல்வாக்கும் திராவிடரை முன்னேற முடியாது முட்டுக்கட்டை போட்டு திராவிடரின் முன்னேற்றத்தை, முற்போக்கை, எதிர்கால வாழ்வின் ஏற்றத்தையே தாழ்வுறச் செய்து, தன்னம்பிக்கையிழக்கச் செய்து குலைத்துவிடும் என்று கூறிடுவது குறைமதியின் விளைவுரையா? அல்ல! அல்ல! நிலையை நன்கு தெரிந்த நிறைமதியின் விளைவுதானே! வேறென்ன!

திராவிடர் ஓரளவு இந்த நிலையை உணர்ந்து உணர்ச்சிகொண்டு தம்மினத்தவரைத் தட்டி யெழுப்பி வரும் இந்த நேரத்திலே, வளர்ந்துள்ள வட நா

ஏகாதிபத்தியம் தனது ஆதிக்க வாழ்வைப் பலப்படுத்திக்கொள்ள, திராவிடரின் கவனத்தை வேறு வேறு திசைகளில் திருப்பிட முனைகிறது!

திராவிடரின் எண்ணத்தைக் கட்டுப்படுத்தி, எழுச்சியை அடக்கப் பார்க்கிறது ஆச்சாரியார் போன்றாரின் "ஆண்டவன், பக்தி, பஜனை, பஜகோவிந்தம்" போன்ற பழமைக் கருத்துக்களை மக்களிடையே பரப்பிடும் போக்கு!

தமிழர்—திராவிடர், பழமையின் பிடியினின்றும், பழங்காலக் கொள்கைகளான, 'வேதவிதி' என்ற தத்துவங்களையே நம்பி, தன்னம்பிக்கையற்ற வாழ்வு வாழ்வதினின்றும் விடுபட்டு, சுய சிந்தனையுடன், தன்னையும், தனது உழைப்பையும், உணர்வையும் உற்சாகத்தையும் துணைக்கொண்ட வாழ்வு வாழ, மக்களிடையே செய்திட வேண்டிய பகுத்தறிவுப் போதனையை விட்டு, சோர் மாறுகப் பஜனையும், பிறப்பால் ஏற்பட்ட தொழிலையே செய்வதுதான் மேன்மையென்றும் பேசிவரும் ஆச்சாரியாரின் போக்கு, ஆனவந்தராக, சென்னை மாகாணத்தின் பிரதமராக வந்த பின்னர் அவர் செய்திடும் போதனைகள் காட்டு மக்களை எங்கே இழுத்துச் செல்லும் என்று நினைக்கிறீர்கள்?

எங்கே இழுத்துச் செல்லும், அழைத்துச் செல்லும், செல்ல முடியும்? பழமைக்கா? புதுமைக்கா? நாக வாழ்வின் நல்வாழ்வுக் கட்டத்திற்கா—நம்பினவன் டவுள்) விட்டவழி விடட்டும் என்ற சஞ்சலமும் ப்பும் நிறைந்த சக்தற்ற சங்கட வாழ்விற்கா? எங்கே த்துச் செல்லும் என்பதைக் கேட்கிறேன்?

யோசித்துப் பாருங்கள் இந்தப் போதனைகள் என், இப் போது என்று?

விஞ்ஞானமும், விஞ்ஞானத்தின் விளைவுகளும், அந்த விளைவுகளின் பலனால், பயனால் மனித வாழ்விலே ஏற்பட்டுள்ள மகத்தான மாறுதல்களும், மனித உழைப்பிலே ஏற்பட்டுள்ள முறைமாற்றங்களும், முன்னேற்றங்களும், முற்போக்கு எண்ணங்களும், மூட நம்பிக்கைகளைப் புகுத்திடும் புராண, பஜனைப் போதனைகளால் மறைக்கப்பட்டுவிடும், பக்தி என்ற போதைத் தெளிவினால் என்ற உள்ளெண்ணமா, ஆச்சாரியாருக்கு?

ஒரு பக்கத்திலே புராணப் பிரசாரம், பக்தி போதனைகள் பாமர, படிக்காத பலப்பல வாழ்வுச் சிக்கல்களிலே சிக்கிச் சுழன்று உழன்றுழன்று உணர்வேதுமின்றித் துடித்துத் துவண்டிடும் மக்களிடையே! தேவைதானா!

அவர்கட்கு, அவர்களின் துயர் துடைத்திட, வாழ்விலே வேதனையுற்றுள்ள விம்மும் நிலையிலுள்ள உற்றார்; உறவினரின் உளம் மகிழக் கூடியாடி வாழ்ந்திட துணையும் தோழமையுமாக விளங்கிட வெறும் சாந்தி மனச்சாந்தி—மகேசன்பால் செலுத்திடும் பக்தி—அதன் மூலம் முக்தி கிட்டிடும் என்ற போதனை மட்டுமே போதுமா?

இத்தகைய போதனையால் மக்களின் எண்ணம் வளராது பகுத்தறிவுப் பாதையின் வழியே சென்றிடாது இருக்கும் நிலையிலேயே, ஏற்கெனவே இருக்கும் இடத்திலேயே தங்கித் தேங்கிக் கிடந்திடத்தானே பா

படும்! இதனையும் மக்கள் உணர்ந்திடும் வகையில் பகுத் தறிவுப் பணி, பிரசாரம் புரிந்தாகவேண்டும்!

வளர்ந்துள்ள வடநாட்டு வாணிபத்தின் பொருளா தாரப் பிடிவேறு நம்மை நெருக்குகிறது, முன்னேற முடியாது, வாணிபத் துறையிலே!

டெல்லியிலே, டெல்லி சர்க்காரிலே முக்கிய அதி காரங்கள் முழுதும் இருப்பதால், அரசாங்க அதிகார மூலம், சட்டதிட்டங்கள் மூலம், நம்மை நாம் சீர்தூக் கிக் கொள்ள முடியாது கட்டுப்பட்டுக் கிடக்கவேண்டி யிருக்கிறது!

இதனிடையே, ஏற்கனவே குறிப்பிட்டபடி, மொழி வழி ஆதிக்கம் செலுத்தி நம்மை நாமே, நாம் திராவிடர், திராவிட இனத்தவர் என்ற எண்ணத் தையே போக்கிடத் திட்டமிட்டுத் துரிதமான ஏற்பாடு கள் எல்லா முனைகளிலும் நடைபெற்ற வண்ணமிருக் கின்றன!

இப்போது முதலில் மொழிப் போர் துவங்கிவிட் டது.

மொழியை நமது தீந்தமிழைச் சாய்த்திடச் செய் திடும் சதியை யெதிர்த்துப் போர் முரசு கொட்டிவிட் டோம், தோழர்களே, போர் முரசு கொட்டிவிட்டோம்.

போர்! போர், மொழிப் போர் ஆரம்பமாகிவிட் டது. திராவிடரின் தன்மானம் வெளிக்கிளம்பிவிட்டது!

தன்னையும், தன் இனமொழியையும் நிலைகுலை யாது காப்பாற்றிக் கொள்ள வேண்டிய மிகமிக அவசி யான அவசரமுமான, ஆனால் ஆதரவற்ற அவல நிலை

யிலே நாம் நின்று கொண்டு தள்ளாடித் தவிக் கிறோமே!

இந்த நிலையா, நமக்கு—தமிழ் மரபினரான, நமக்கு, நேரத் திராவிடருக்கு?

மொழியைப் போற்றிட, தாய்மொழியை உருக் குலையாது பாதுகாத்திடவும் முடியாத நிலையா?

தாய் மொழியை எழுதவும் படிக்கவுமே தெரியாத மக்கள் நூற்றுக்கு எண்பது பேருக்கு மேல் இருப்ப தாக அரசாங்கத்தினரின் புள்ளி விவரங்கள் கூறுகின் றனவே!

நூறு மக்களில் இருபதே இருபது பேருக்குத்தான் தமிழ்—தமிழனது தாய்மொழி படிக்கவும் எழுதவும் தெரியுமாம்!

மற்ற என்பதுபோர் படியாதார்—படிக்கத் தெரி யாதார் பட்டியலிலே அடங்கிவிட்டனர்!

இதனைக் கணக்கெடுத்து அறிக்கை வெளியிடு கிறது அரசாங்கம்!

படியாத மக்களையும் படித்தவர்களாக, தாய் மொழியையேனும் கற்றவர்களாகச் செய்தி—வேண்டி யது மிக மிக முக்கியமான கடமையாகிறது, இன்றைய நிலையில்.

கல்வி—இன்றைய உலகில், இந்த இருபதாம் நூற் றாண்டில், விஞ்ஞான உலகில், மனித வாழ்வின் முக்கிய தேவைகளில் மிகவும் முக்கியமான தொன்றாகும்!

கல்வி—மனிதனது கருத்தைப் பண்படுத்துகிற, பலபல எண்ணங்களையும், பழக்க வழக்கங்களை

போதனைகளையும் படித்துப் பார்த்துத் தெளிவை யேற் படுத்திக்கொள்ள உற்சாக மிக்க பெருந்தோழனுகவும் துணைவனுகவும் விளங்குகிறது!

தமிழரது வேதமென்றும், தமிழரது வழி காட்டி யென்றும், தமிழரது தோழன், துணைவன் என்றும் பலபடப் புகழ்படும், உலகப் பொது மறையாம் திருக் குறளின்படி, நமது காட்டிலே நூற்றுக்கு இருபதே இருபது பேருக்குத்தான் கண்கள் இருக்கின்றன. மற்றவரெல்லாம் கண்ணற்ற கபோதிகளே!

ஆம், தோழர்களே, ஆம்! இந்தத் திருநாட்டிலே காட்டிலே வாழும் மனிதர்களிலே நூற்றுக்கு எண்பது பேர், எண்பது திராவிடப் பெருங்குடி மக்கள் கண் ணிருந்தும் கண்ணற்ற கபோதிகளின் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டியவர்களாகத்தானே, இருக்கின்ற னர், திருக்குறளின் கருத்துப்படி, அறிவான அந்த அற நூலின் கொள்கைப்படி!

நூற்றுக்கு எண்பதுபேர் படியாதவர்கள். அவர் கள் அத்தனை பேரும் கபோதிகள்தானே!

திருவள்ளுவர் கூறியபடி, படியாதவர்கள் கண் ணிருந்தும் குருடர்கள்தானே!

உலக நிகழ்ச்சிகளை, ஏன், வாழ்வின் சாதாரண சம் பவங்களையே கூடப் படித்தோ, எழுதியோ தெரிந்து கொள்ளவோ, தெரிவிக்கவோ முடியாத குருடர்கள் தானே, படியாதவர்கள்!

அச்சுக்கலையும், அதன் மூலம் வெளியாகிடும் புத்த [illegible]களும், செய்தித்தாள்களும் அன்றுடம் ஏந்தி வரும் [illegible]த்துக்களைப் படிக்கத் தெரியாதவர்கள், கையிலே

ஏந்தி, திருப்பித் திருப்பிப் பார்த்துப் பெறும் பயன் தான் என்ன? குருடர்தானே!

குருடனின் நிலைதானே, படிக்கத் தெரியாது விழித்துத் தவித்து படிக்கத் தெரிந்தவனின் தயவையும் துணையையும், தேடி, ஓடி, நாடி அவன் கூறிடும் வாய் மொழியையே நம்பிக்கேட்டு நடந்திடும் குருட்டு வாழ்வுதானே வாழவேண்டும், வாழவேண்டியு மிருக்கி றது, படியாதவர்கள், படிக்கத் தெரியாதவர்கள்?

தமிழகத்திலே வாழ்ந்திடும் தமிழர்களிலே தமி ழையே படித்தவர் தொகை மிகவும் குறைந்துள்ள இந்த நேரத்திலே, புதிய தொரு மொழியை ஆளும் மொழியாக, ஆதிக்க மொழியாக, அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ளத் தமிழர் விரும்புவரா? விரும்ப லாமா?

தமிழரது நிலை, தமிழரது வாழ்க்கை நிலை உயர வேண்டுமானால் தமிழனது மொழி தமிழ் மொழி நிலை குலையாது இருந்திடத்தானே வேண்டும்?

தமிழன்—திராவிடன் தனது மொழிக்கு வரும் கேட்டைத் துடைத்து, தனது மொழிக்கு வாழ்வும் வளமும் உண்டாக்கிட விரும்புகிறான், இன்று!

தனது மொழியின் மீது ஆதிக்கம் செலுத்திடும் முறையிலே நுழையும் வேற்று மொழியான இந்தியை எதிர்த்துப் போரிடும் நிலைக்குத் தமிழன்-திராவிடன் தள்ளப்பட்டுவிட்டான்! தயாராகிவி டான்!

'கட்டாய இந்தி ஒழிக' என்று முழக்கமிடுவ தாலோ, அல்லது, இரயில்வே நிலையங்களிலேயுள்ள பெயர்ப் பலகைகளிலே எழுதப்பட்டுள்ள இந்தி எழுத் துக்களைத் தார்பூசி மறைத்து விடுவதாலோ, தமிழ் வாழ்ந்து விடுமா? இந்தி ஒழிந்து விடுமா? தமிழ் நாடு— திராவிட நாடு கிடைத்து விடுமா? என்றெல்லாம் கேள் விகள் கேட்கப்படுகின்றன நாட்டில்!

இந்த ஒரு சிறுபாதையால்மட்டுமே இலட்சியத்தை அடைந்துவிடுவோமென்று நாங்கள்-திராவிடர்கள் கூற வில்லை, கருதவுமில்லை என்பதைக் கேள்விகள் கேட்டிடு வோர் முதலில் புரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

இது மட்டுமல்ல, எங்கள் முயற்சி மொழியைப் போற்றிடவோ, காத்திடவோ, திராவிட நாட்டைடப் பெற்றிடவோ—அடைந்திடவோ!

பல முயற்சிகளிலே, பல முறைகளிலே—வழி களிலே இதுவும் ஒன்று—அவசியமும் அவசரமுமான முயற்சி—வழி என்ற அளவிலேதான், இந்தி எதிர்ப் பும்—இந்தி யெழுத்தை அழித்திடும் இயக்கமும் என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

இந்தி எதிர்ப்பு—ஒரு முயற்சி, பல முயற்சிகளிலே ஒன்று, என்றும் இந்த முயற்சியேகூட, உரிமைப் போரும் போருக்கான அடிப்படையாக என் மாறாது, மாற முடியாது, மாறக்கூடாது என்பதையும் எண்ணிப் பாருங்கள்!

மாறும், மாறலாம், மாறித் தீரலாம் என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது, உலக வரலாறுகளிலே சிலபல நிகழ்ச்சிகளைக் கண்டிருப்பதால்.

இன்று, மொழிப் போராட்டத்தைக் கவனியாதது போல ஆளவந்தார் அலட்சியப்படுத்தி யிருக்கின்றனர் என்பது உண்மைதான்!

இந்த அலட்சியம், இலட்சியமற்ற இயக்கம், இந்த இந்தி யெதிர்ப்பு இயக்கம் என்ற எண்ணத்தின் விளைவல்ல, ஏற்கனவே இரண்டு எதிர்ப்புப் புயலைக் கண்டதின் பாடமே தவிர, வேறில்லை என்பதையும் நினைவிற்குக் கொண்டு வரவேண்டும்.

இந்தி எதிர்ப்பினால் என்ன பயன், பலன், தமிழுக்கோ, திராவிடருக்கோ என்று கேட்டிடும் அதே நேரத்தில், இதே ஆளவந்தார்கள், இந்தி எதிர்ப்பைத் தடுத்து நிறுத்திட, அடக்கி ஒடுக்கிட எவ்வளவு அடக்கு முறைகளை யெல்லாம் அள்ளியள்ளி வீசினர்.

முதற் போராட்டத்திலே, ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரரைச் சிறைக் கம்பிகளுக்கிடையே தள்ளிப் பூட்டினரே? என், எதனால்?

இரண்டாம் முறை குடந்தையிலே குருதி வெள்ளம் ஓடியதே, வீதியெல்லாம், ஏன் அலட்சியப்படுத்த வில்லை அப்போது?

அடக்கு முறையினால், இந்தி எதிர்ப்பு உணர்ச்சி வேகமாக வளர்ந்து இன உணர்ச்சி பெற்று மக்க
திராவிட இன முழக்கம் செய்திடுவதைக் க

கொண்ட கிலியே தவிற வேறென்ன, இவர்களது அலட்சியப் போர்வைக்குக் காரணம்.

ஆகஸ்டு மாதத்திலே அலட்சியமாக விடப்பட்ட ஆகஸ்டுக் கிளர்ச்சியைப் பற்றி அக்டோபரில் பிரதமர் நேரு பேசிடுவது, அலட்சியத்தின் எடுத்துக்காட்டா? அச்சத்தின் விளைவால் கொட்டப்பட்ட ஆத்திர மொழிகளா? எண்ணிப் பாருங்கள் தோழர்களே எண்ணிப் பாருங்கள் பகுத்தறிவோடு!

ஒரு சாதாரண-சர்வ சாதாரணமான சிறு கிளர்ச்சி என்று நினைக்கப்பட்ட ஒரு சம்பவம், உரிமைக் கிளர்ச்சி அமெரிக்க நாட்டின் அடிமைத் தளையைத் தூள் தூளாக உடைத் தெரிந்து, அமெரிக்கரின், சுதந்திர சாசனத்தைப் பிரகடனப் படுத்தும் வெற்றி விழா வகையிலே சென்றது, சென்றிருக்கிறது என்ற செய்தியை அமெரிக்க நாட்டின் வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுவதை கவனிக்கவேண்டும், நாம்!

அமெரிக்கா, ஆங்கிலரின் ஆட்சிக்கு அடங்கியிருந்த காலத்திலே, ஆங்கில நாட்டுப் பாராளும் மன்றம் செய்திடும் சட்டங்கள் யாவும் அமெரிக்கரைக் கட்டுப்படுத்தி வந்தன!

அப்போது ஸ்டாம்ப் ஆக்ட் (Stamp Act) என்ற ஒரு சட்டம் ஒன்று வந்தது. அமெரிக்கர் இதனை எதிர்த்தனர். தங்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத ஆங்கிலப் பாராளு மன்றத்தின் சட்டத்திற்குக் கட்டுப் படமாட்டோம், கீழ்ப்படிய மாட்டோம் என்று முழக்கத்துக் கிளம்பினர்.

அமெரிக்கர் தங்களது எதிர்ப்பை, எதிர்ப்புணர்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள முதலில் பாண்டன் என்ற துறைமுகத்திற்குள் சிகப்பு இந்தியர் வேடமிட்டு நுழைந்து, கப்பல்களிலிருந்த தேயிலையைக் கடலிலே கொட்டினர்.

தேயிலைக் கடலிலே கொட்டுவதால் என்ன பயன்? வெட்டிவேலை என்று கருதப்பட்ட, அந்தச் சாதாரணக் கிளர்ச்சிதான், சர்வ சாதாரணமான கிளர்ச்சியேதான். அமெரிக்கா நாட்டின் விடுதலை சாசனத்தைப் பிரகடனப் படுத்திய வெற்றிவிழா கொண்டாடிடும் வரையிலேவளர்ந்தது.

வரலாறு தரும் நிகழ்ச்சி—பாடம் இது!

என் இந்திக் கிளர்ச்சியும், இந்த நாட்டின், திருநாட்டின் விடுதலைக் கிளர்ச்சிக்கு வித்திட்டதாகவே இருக்க முடியாது?

தமிழரை — திராவிடரை முதன் முதலில் தமிழுணர்ச்சி, தன்னின உணர்ச்சி — திராவிடன் என்ற உணர்ச்சி கொள்ளச் செய்தது, இந்தி எதிர்ப்புதானே? மறுக்க முடியாதல்லவா!

நமது எதிர்காலம்—திராவிடரின், எதிர்காலம் மிகவும் தெளிவற்று இருக்கிறது!

திராவிடன், திராவிட நாட்டைத் தனி நாடாகப் பிரித்து, தன்னரசு செலுத்திட நினைத்திடும், விடுதலை வேட்கையை நிறைவேற்றியாக வேண்டும்.

இதற்காக நாம் எவ்வளவு போராட்டங்களை, போர்க்களங்களை, பிணக் குவியல்களைக் காண வேண்டுமோ, தெரியாது.

திராவிடனின் ஒவ்வொரு துளி இரத்தமும், இனத்தின் எழுச்சிக்கும் எதிர்கால சந்ததியின் ஏற்றத்திற்கும் கல்லை பாதையை வகுத்திடத் துடி துடித்தாக வேண்டும்.

எதிர்ப்பு—ஏளனம்—கேலி — இண்டல் — அடக்கு முறை-குண்டு வீச்சு, தடியடி தர்பார் எதையும்தாங்கும் இதயம் படைத்த என்னருமைத் திராவிடத் தோழர்களே, நீங்கள் அனைவரும் அதற்காகத் தயாராகுங்கள்.

இரத்தம்—திராவிடனின் இரத்தம்—ஆறாக ஓடட்டும். அதற்காகக் கவலைப்பட வேண்டாம்—வேண்டிய தில்லை, உரிமைப் போராட்டத்தில்.

நமது முன்னணி வீரர்கள் அனைவருமே இறந்தொழியலாம். அண்ணை, நமது அருமை அண்ணை, அறிஞர் அண்ணைவையும் நாம் பறி கொடுக்க வேண்டியிருக்கலாம்.

செத்தவர்களுக்காகக் கவலைப்படவோ, கண்ணீர் விடவோ, கல்லறைகள் எழுப்பிடவோ, நேரமில்லை, அப்போது.

பிணங்களின் மீது, திராவிடனின் பிணக் குவியல்களின் மீது ஓடியேனும் போரிட்டுப் போரிட்டுத் திராவிடத்தைப் பிரிப்போம்—வாழ்விப்போம், நாம்.

நாம் சிந்திடும் இரத்தம் — நமது உடலிலிருந்து கொட்டப்பட்ட இரத்தம் ஏற்படுத்தும் இரத்தச்சுவடு, அடையாளம்—அந்தச் சம்பவம் நமது பிற்கால சந்ததியின் எழுச்சிக்கு, இன எழுச்சிக்கு, ஏற்றத்திற்குப் பயன் படட்டும்.

இரத்தச்சுவடு—இரத்தச்சுவடு — இனத்திற்காக—இனத்தின் விடுதலைக்காக, இனத்தின் சொந்த நாட்டைச் சுதந்திர நாடாக்கிடும் விடுதலைக் கிளர்ச்சியில் சிந்திடும் இரத்தம், இரத்தச்சுவடு—இரத்தச்சுவடு, இனத்தின் எழுச்சி முரசொலி—இன முழக்கம்—இன முழக்கம் என்பதை மறவாதீர்.

வணக்கம்.

தமிழ் மூலம் ஆங்கிலம் படிக்க
விரும்புவர்களுக்கு

ராமுலு

இங்கிலீஷ் ஆசான்

ENGLISH SELF TUTOR

ஓர் சிறந்த புத்தகம்

உயர்தியாயர் உதவியின்றி தானே முழுத
வாசிக்கக்கற்றுக்கொள்ளத்தக்க முறையில்
அகரவாரியாகத்தொகுக்கப்பெற்ற நூல்

சாதா பதிப்பு 168 பக்கங்கள் அட்டை பைண்ட்

விலை ரூ 1-8-0 விலை ரூ 2-0-0

ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

கலைமன்ற வெளியீடுகள்

அறிஞர் அண்ணாதுரை

புராண மதங்கள்	...	1—0
தேன் துளிகள்	...	1—0

மு. கருணாநிதி

இரத்தக் கவடு	...	1—0
இன முழக்கம்	...	1—0
கொலைக்களம்	...	0—8

ஊடுருவி

அறியாமை	(இச்சர்சால்)	...	1—0
உண்மை	,,	...	1—0
கோயில்கள்	,,	...	1—0
கடவுள்	,,	...	1—0
மக்கள் உரிமை	,,	...	1—0
நெப்போலியன்		...	1—0
தொழிலாளர்	(மாஜினி)	...	1—0
சீனத்துச் சிங்கம்		...	1—0
அரசாங்கம்	(லெனின்)	...	1—0
கலிங்கப் போர்		...	1—0
ரோமியோ - ஜூலியத்		...	1—0
வீரமங்கை ஜோன்		...	1—0
லைலா - மஜ்னு		...	1—0

விற்பனை நிலையம்:—

எம். எஸ். ராமுலு கம்பெனி

286, சைனுபஜார்

P. B. No 275 — சென்னை - 1.

Printed by The Srimagal Company, Madras-1